P6-HMT

PRIMARY SCHOOL
CONTINUAL ASSESSMENT 1
PRIMARY SIX
தாள் - 1

HIGHER TAMIL LANGUAGE

Name : ____________________________ (      )

Class : Pr 6______________

Date :                                   Parent's Signature:

_______________

Total Time: 1 hour 20 minutes

|  |  |
| --- | --- |
|  | 60 |

INSTRUCTIONS TO CANDIDATES

Do not open this booklet until you are told to do so.

Follow all instructions carefully.

Answer all questions.

This booklet consists of 9 printed pages.

P6
CA - 1
தாள் - 1

<u>இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.</u>

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**பொறுமையால் ஏற்பட்ட நன்மை**

பள்ளியில் உனக்கும் உன் நண்பனுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. நீ பொறுமையைக் கடைப்பிடித்து இப்பிரச்சினையைச் சமாளித்து நன்மையும் அடைகிறாய்.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

" அன்று பள்ளி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். வீட்டுக்குப் போகும் வழியில் பூங்கா ஒன்று இருந்தது. பூங்காவைக் கடந்து செல்லும் போது திடீரென்று யாரோ அழும் சத்தம் கேட்டது. சத்தம் வரும் திசையை நோக்கிச் சென்றேன். ........... "

முற்றும்

## 'அ' பிரிவு

A1 <u>பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)</u>

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

அருணகிரி வயதானவர் ; கண்பார்வை அற்றவர். ஒரு நாள், தம் சிறிய வீட்டை விட்டுத் தெருவில் (Q1) **<u>நடக்கும்</u>** சென்றார். அவர் தம் கையில் ஒரு (Q2) **<u>விலக்கை</u>** வைத்துக்கொண்டிருந்தார். அவர் எதிரே ஓர் இளைஞன் வந்துகொண்டிருந்தான். அவன் அருணகிரி அருகில் வந்து, "உங்களுக்குப் பார்வை மட்டுமல்ல ; (Q3) **<u>அறிவா</u>** இல்லை என்று நினைக்கிறேன். கண் தெரியாதபோது, விளக்கு எதற்கு?" என்றான். அருணகிரி மெல்லச் (Q4) **<u>சிரித்துக்கொண்டேன்</u>**. பின்னர், "இந்த விளக்கு என் பார்வைக்கோ துணைக்கோ அல்ல. உனக்கும் உன்னைப் போல் வரும் மற்றவர்களுக்கும்தான். நான் தினமும் இரவில் என் கையில் விளக்குடன் வெளியே போவேன். தெருவில் (Q5) **<u>வருபவன்</u>** விளக்கைப் பார்த்ததும், நான் பார்வையற்றவன் என்று அடையாளம் கண்டு, என் மேல் மோதாமல் இருப்பார்கள்!" என்றார்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.**

Q6. மழை விடாமல் பெய்துகொண்டிருந்ததால் கட்டடத் தொழிலாளர்களால் தங்கள் வேலையைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை.

மழை விடாமல் பெய்துகொண்டிருந்ததே கட்டடத் தொழிலாளர்கள் தங்கள் வேலையைத் தொடர்ந்து செய்ய முடியாததற்குக் ______________________.

Q7. போட்டியில் வெற்றி பெற கடின உழைப்பு அவசியம் என்பது யாவரும் அறிந்ததேயாகும்.

கடின உழைப்பு இல்லாவிடில் போட்டியில் ______________________

______________________________________________

Q8. உலகக் கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்றை மக்கள் மெரினா பேயில் கண்டனர்.

உலகக் கிண்ணக் காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிச் சுற்று மெரினா பேயில் மக்களால் ______________________

______________________________________________.

Q9. நீண்ட நேரமாக விடாமல் நீச்சல் பந்தயத்திற்காகப் பயிற்சி செய்ததால் வீராங்கனைகள் களைப்படைந்தார்கள்.

வீராங்கனைகள் களைப்படைந்ததற்கு அவர்கள் நீண்ட நேரம்

______________________________________________

______________________________________________



4

A3 <u>வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)</u>

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

குறும்புக்காரச் சிறுவனான ராமு, ஒரு சமயம், யாரையாவது அழ வைத்து வேடிக்கைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினான். அதனால் அவன் ___(10)___ **(கடை)** சென்று வாழைப்பழத்தை வாங்கி வந்தான். பழத்தைச் சாப்பிட்டுவிட்டு அதன் தோலை ___(11)___ **(நடைபாதை)** போட்டான்.

பின் வீட்டுக்குச் சென்ற அவன் சன்னல் வழியாக நடைபாதையைக் கவனித்தான். அப்பொழுது அவனது நண்பர்கள் அவனைத் தங்களுடன் விளையாட அழைத்தனர். ராமு ஆர்வத்துடன் ___(12)___ **(மாடிப்படி)** இறங்கி, வேகமாக ஓடி வந்தான். அவ்வளவுதான், அவன் போட்ட தோலில் அவனே வழுக்கி விழுந்து ___(13)___ **(வலி)** கதறினான். தன் வினை தன்னைச் சுடும் என்பதை அவன் உணர்ந்தான்.



5

## 'ஆ' பிரிவு

B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

1799-ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் பிறந்தார் ஜேம்ஸ் பேர்ரி. அவர் பள்ளிப் படிப்பில் மிகச் சிறந்து விளங்கினார். (Q14) ______________________. பிறகு, உலகின் பல நாடுகளுக்குச் சென்றார்; சிறந்த மருத்துவர் எனப் புகழ் பெற்றார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு, அவர் தம் தாயகமான ஸ்காட்லாந்துக்குத் திரும்பினார். (Q15) ______________________. அவர் இறந்த பிறகுதான் அவர் யார் என்பது மக்களுக்குப் புரிந்தது.

ஆம்! ஜேம்ஸ் பேர்ரி என்பவர் ஓர் ஆண் அல்ல என்பதே உண்மை. (Q16) ______________________. அக்காலத்தில் பெண்கள் மருத்துவம் படிப்பதற்கு அனுமதி இல்லை. (Q17) ______________________. பெண்களுக்குச் சமத்துவம் இல்லாத காலக்கட்டத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை ஜேம்ஸ் பேர்ரி நிரூபித்துவிட்டார்.

5

(1). அவர் ஒரு விஞ்ஞானி.

(2). 1865- ஆம் ஆண்டு அவர் காலமானார்.

(3). எனவே,ஜேம்ஸ் பேர்ரி ஆண் வேடத்தில் கற்று மருத்துவரானார்.

(4). அவர் தம் பன்னிரண்டாவது வயதிலேயே வழக்கறிஞர் படிப்பை முடித்துவிட்டார்.

(5). அவர் ஒரு பெண்.

(6). எனவே, ஜேம்ஸ் பேர்ரி பெண் வேடத்தில் கற்று மருத்துவரானார்.

(7). அவர் தம் பன்னிரண்டாவது வயதிலேயே மருத்துவக் கல்வியை முடித்து விட்டார்.

(8). 1865- ஆம் ஆண்டு அவர் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்க முயன்றார்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q 14 | ( ) |
| Q 15 | ( ) |
| Q 16 | ( ) |
| Q 17 | ( ) |

## 'இ' பிரிவு

C5 சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

1928-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில், படகோட்டும் போட்டிய பாபி பியர்ஸ் தங்கப்பதக்கம் வென்றார்.மேலும், அப்போட்டியைப் பார்த்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்களின் உள்ளங்களையும் அவர் கொள்ளை கொண்டார்.

பாபி பியர்ஸ் ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் பிறந்தார். அவருடைய தந்தையும் படகோட்டுவதில் பெரும் வீரர். பாபிக்கு ஐந்து வயதாகும் போது, அவர் சிறிய படகில் சிட்னி துறைமுகத்தை வலம் வருவார். ஆறு வயதில், பதினான்கு வயது பையன்களோடு போட்டியிட்டு முதல் வெற்றியைப் பெற்றார்.

இருபது வயதாவதற்குள் பாபி ஆஸ்திரேலியாவின் படகோட்டும் வீரராகத் திகழ்ந்தார். மறு ஆண்டு, அவர் ஆம்ஸ்டர்டாம் சென்று, ஒலிம்பில் போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டார்.

இறுதிப் போட்டியில், அவர் அமெரிக்காவைச் சேர்ந்த கென்மைர்ஸுடன் போட்டியிட்டார். தொடக்கத்திலிருந்து பாபியே முன்னிலை வகித்து வந்தார். பாதிதூரம் கடந்தபோதும் அவர் இன்னும் முன்னிலையிலேயே இருக்க, மைர்ஸ் மிகவும் பின்தங்கி இருந்தார்.பாபி மிகச் சுலபமாக அப்போட்டியில் வென்றுவிடுவார் என்று தோன்றியது.

ஆனால் திடீரென அங்கே ஒரு சம்பவம் நடந்தது. கரையில் நின்றிருந்தவர்களின் பெருங்கூச்சலைக் கேட்ட பாபி, திரும்பிப் பார்த்தார். அங்கே ஒரு வாத்தும் அதன் குஞ்சுகளும் பாபியின் படகுப் பாதையின் குறுக்கே வந்து கொண்டிருந்தன. அப்படகு அவற்றின் மேல் மோத இருந்தது. தாம் ஒலிம்பிக் படகோட்டியின் குறுக்கே நீந்துகிறோம் என்று அப்பறவைகளுக்குத் தெரியவில்லை.

உடனடியாக பாபி, தம் வேகத்தைக் கட்டுப்படுத்தினார். அப்போது மைர்ஸ் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். கரையருகே நின்றிருந்தவர்கள் பெருங்கூச்சலிட்டபடி இருந்தனர்.வாத்துகள் போகும்வரை, பாபி காத்திருந்தார்.பின்னர் மீண்டும் படகை வேகமாகச் செலுத்திச் சுலபமாகப் போட்டியில் வென்று தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

ஒலிம்பிக் வீரர்களிலேயே பாபிதான் அனைவர் மனத்திலும் இடம் பிடித்தார். இந்த வாத்துகளின் கதையைக் கேட்ட அவரது ஆஸ்திரேலிய ஒலிம்பிக் குழுவில் இருந்த நண்பர்கள் **<u>வியப்படையவில்லை</u>**. "பாபி அப்படிப்பட்டவர்தாம்!" என்றனர்.

பாபி பியர்ஸ் தமது ஆறு வயதிலிருந்து முப்பத்துமூன்று ஆண்டுகள் போட்டிகளில் பங்கு பெற்றார். இந்த ஆண்டுகளில் அவர் ஒரு போட்டியில் கூடத் தோற்றதில்லை. 1945-இல் இருந்து அவர் போட்டிகளில் பங்கேற்பதில்லை.

வினாக்கள்.

1) பாபி பியர்ஸ் என்பவர் யார்? (3)

______________________________

______________________________

______________________________

2) பாபி பியர்ஸ்குப் படகோட்டுவதில் ஏற்பட்ட ஆர்வத்திற்குக் காரணம் என்ன? (4)

______________________________

______________________________

______________________________

3). பாபி பியர்ஸ் ஏன் தன் படகின் வேகத்தைக் கட்டுப்படுத்தினார்? (4)

______________________________

______________________________

______________________________

21. கரையருகே நின்றிருந்தவர்கள் பாபி பியர்ஸுக்கு எவ்வாறு தங்கள் ஆதரவைக் காட்டினர்? (3)

22. "பாபி அப்படிப்பட்டவர்தாம்" என்னும் தொடரில் அப்படிப்பட்டவர் என்ற சொல் எதை உணர்த்துகிறது? விளக்குக (4)

23. பாபி பியர்ஸ் எத்தகைய சாதனைகளைப் புரிந்துள்ளார்?(4)

24. பொருள் எழுது (4 ம.)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. திகழ்ந்தார்: ____________

ஆ. வியப்படையவில்லை: ____________

அருணகிரி வயதானவர்...

1) நடந்து 2) விளக்கை 3) அறிவும்

4)சிரித்துக்கொண்டார் 5)வருபவர்கள்

6)காரணம் ஆகும்
7) வெற்றி பெற முடியாது.
8)காணப்பட்டது.
9) விடாமல் நீச்சல் பந்தயத்திற்காகப் பயிற்சி செய்ததே காரணம் ஆகும்.

10) கடைக்கு 11) நடைபாதையில் 12) மாடிப்படியிலிருந்து 13) வலியால்

14) 7 15) 2 16) 5 17) 3

18) பாபி பியர்ஸ் 1928 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் படகோட்டும் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றவர் ஆவார்.

19) பாபி பியர்ஸின் தந்தை படகோட்டுவதில் பெறும் வீரர் என்பதே அவருக்குப் படகோட்டுவதில் ஆர்வம் ஏற்படக் காரணம் ஆகும்.

20)பாபி பியர்ஸ் கரையில் நின்று கொண்டிருந்தவர்களின் பெருங்கூச்சலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த போது, ஒரு வாத்தும் அதன் குஞ்சுகளும் அவரின் படகுப் பாதையில் வந்து கொண்டிருந்ததைப் பார்த்தார். அவரது படகு அவற்றின் மேல் மோத இருந்ததை உணர்ந்ததால் அவர் தன் படகின் வேகத்தைக் கட்டுப்படுத்தினார்.

21)கரையில் நின்றிருந்தவர்கள் பெருங்கூச்சலிட்டபடி பாபி பியர்ஸ்க்கு தங்கள் ஆதரவைக் காட்டினர்.

22)"பாபி அப்படிப்பட்டவர் தாம்" என்னும் தொடர் அவர் பிற உயிரினங்களிடம் அதிகம் அக்கறைக் காட்டுபவர் என்பதை உணர்த்துகிறது. ஒலிம்பிக் போட்டியே ஆனாலும் கூட வெற்றியை விட வாத்திற்கும் அதன் குஞ்சுகளுக்கும் எந்தத் தீங்கும் நேரக்கூடாது என்பதில் அவர் கவனமாக நடந்து கொண்டதின் மூலம் நாம் அதைப் புரிந்து கொள்ளலாம்.

23)பாபி பியர்ஸ் தமது ஆறு வயதிலிருந்து முப்பத்து மூன்று ஆண்டுகள் போட்டிகளில் பங்கு பெற்றார். அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி கண்டார். இத்தகைய சாதனைகளை பாபி பியர்ஸ் புரிந்துள்ளார்.

24) விளங்கினார்

25)வியப்படையவில்லை.

P6

உயர்தமிழ்

# தேர்வுத்தாள் - 2

## முதற் பகுதி (கட்டுரை)

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

<u>வினா 1</u>

என் நண்பனுக்கு நான் செய்த ஓர் உதவி என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுது.
(அது என்ன உதவி, அதை எதற்காக நீ செய்தாய்; அந்த உதவியை செய்த போது உன் மனநிலை எப்படி இருந்தது; உன் நண்பன் அந்த உதவியை எப்படி ஏற்றுக்கொண்டான் என்பன போன்ற விவரங்களை நீ உன் கட்டுரையில் விளக்கி எழுதலாம்)

<u>வினா 2</u>

கீழே ஒரு கதையின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அக்கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்கவும்.

வகுப்பாசிரியர் திருத்திய தேர்வுத் தாள்களோடு வகுப்புக்குள் நுழைந்தார். அப்போது சற்று முன் வரை இருந்த சலசலப்பு மாறி வகுப்பே ஆழ்ந்த அமைதியில் மூழ்கியது ......................

தாள் - 2

'அ' பிரிவு

**A1 *பிழை திருத்தம்* (10 மதிப்பெண்கள்)**

***பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.***

வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலையை அடையக் கடின உழைப்பும் விடாமுயற்சியும் அவசியம். இளமைக்காலத்தை வீணாக்காது நன்கு பயன்படுத்திக்கொள்ளும் ஒருவனை வெற்றி (Q1) *தழுவுகிறான்.* அதுமட்டுமா, கடின உழைப்போடு நல்ல சிந்தனையும் சேருகின்றபோது, நாம் அத்தருணமே திறமை உடையவர்களாக விளங்கத் (Q2) *தொடங்கினோம்.* சோம்பல் என்பது இளமைப் பருவத்துக்கு ஆகாத ஒன்று. சோம்பலுடன் செய்யப்படும் செயல்கள் (Q3) *சிறப்பற்றது* என்று கூறினால் அது மிகையாகாது. ஆகவே, (Q4) *ஒவ்வொரு* இளைஞனின் வாழ்க்கையையும் கடின உழைப்பு, விடாமுயற்சி, நல்ல சிந்தனை, சுறுசுறுப்பு ஆகிய பண்புகள் ஒளிமயமாக்குகின்றன. அப்பண்புகள் அவன்ன வெற்றிநடை (Q5) *போட்டு* வைக்கின்றன. அதுமட்டுமா? அவை அவனை வாழ்வில் உன்னத நிலையையும் அடையச் செய்கின்றன.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

A2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

6. பழங்காலத்தில் கட்டப்பட்ட அழகிய அரண்மனைகள் உலகப் போரில் அழிந்தன.

பழங்காலத்தில் கட்டப்பட்ட அழகிய அரண்மனைகள் அழிவிற்கு ____________

____________________________________________.

7. மகாபாரத்தில் கர்ணனின் வீரமும் கொடைத்தன்மையும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளன.

மகாபாரதத்தின் வழி நாம் கர்ணனின் ____________________

____________________________________________.

8. தூய்மையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்குவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் முயற்சியும் தேவை.

எல்லாருடைய ஒத்துழைப்பும் முயற்சியும் இல்லாவிட்டால் ____________________

____________________________________________

9. தலைக்கவசம் அணியாத மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள்மீது போக்குவரத்துக் காவலர்கள் கடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

தலைக்கவசம் அணியாத மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மீது போக்குவரத்துக் காவலர்களால் ____________________________________________

**A3** *வேற்றுமை உருபுகள்* *(8 மதிப்பெண்கள்)*

*பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.*

"முடியாது ராமு! முடியாது! உனக்கு எத்தனை முறைதான் சொல்வது? நீ ஆயிரம் முறை கெஞ்சிக் கேட்டாலும் சரி, என்னால் (Q10) ______________ (உன்) வேண்டுகோளுக்கு இணங்க முடியாது," என்று அம்மா கோபத்தை அடக்கிக்கொண்டு கூறினார். (Q11) ______________ (காலை) எழுந்ததிலிருந்து ராமு தன் தாயாரை ஐம்பது வெள்ளிக்காக நச்சரித்துக்கொண்டிருந்தான். கடையில் பார்த்த புதுப் பந்தே அதற்குக் காரணமாகும். அம்மாவின் மறுப்பை (Q12) ______________ (ராமு) தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் வாய்விட்டு அழத் தொடங்கினான். வேறு வழியின்றி அம்மா தன் (Q13) ______________(பணப்பை) உள்ளே இருந்த பணத்தை எடுத்தார். அப்பணத்தை அடம்பிடிக்கும் தன் மகனிடம் கொடுக்கலாமா என யோசித்தார்.

‘ஆ’ பிரிவு

**B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

*பின்வரும் பகுதியில் **Q14** முதல் **Q17** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.*

காட்டிற்குப் புதிதாக வந்த சிங்கத்தைக் கண்ட மற்ற விலங்குகள் யாவும் பயந்து ஓடின. இவ்விதம் பயந்து ஓடிய யானையை ஓர் ஆடு கண்டது. (Q14)____________________. உயிர் பிழைத்தால் போதும் என்று எண்ணிய யானை ஆட்டின் சொற்படி தரையில் மாண்டுவிட்டதுபோல் படுத்துக்கொண்டது. ஆடு யானையின்மீது ஏறிக் கம்பீரமாக அமர்ந்து கொண்டது. சிங்கம் அருகில் வந்ததும் அது, “ஆஹா! இதுவரை ஒன்பது சிங்கங்களை உண்டுவிட்டேன். இன்னும் ஒரு சிங்கம் கிடைத்தால்போதும், என் பசி தீர்ந்துவிடும்,” என்றது. (Q15)____________________. அது அங்கிருந்து பயந்து ஓடியது.

வழியில் சிங்கம் தன் நண்பனான நரியைச் சந்தித்தது. அது சிங்கத்திடம் என்ன நடந்தது என்று விசாரித்தது. சிங்கம் நரியிடம் நடந்ததைச் சொன்னது. (Q16)____________________. அது சிங்கத்திடம் தன்னை ஆடு இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லச் சொன்னது. சிங்கம் நரியுடன் வருவதை ஆடு கண்டது. அது உடனே நரியிடம், (Q17)“ ____________________,” என்று கூறியது. நரி தன்னை ஏமாற்றிவிட்டதாகச் சிங்கம் எண்ணியது. அது நரியை அங்கேயே அடித்துக் கொன்றது. அதன்பிறகு அது அக்காட்டைவிட்டே ஓடி மறைந்தது.



16.

| | |
|---|---|
| (1) | நன்றி நரியே! நான் சொன்னபடி தப்பி ஓடிய சிங்கத்தை என்னிடமே திருப்பிக் கொண்டுவந்துவிட்டாயே |
| (2) | ஒரு யானை மீது ஏறி அமரக் கூடிய திறமை இந்த ஆட்டிற்கு உள்ளதே என்று அதிர்ந்தது சிங்கம் |
| (3) | சிங்கத்திடமிருந்து தப்பிக்கும் வழி தனக்குத் தெரியும் என்றது ஆடு |
| (4) | நரி சிங்கத்தைப் பிடிக்க ஒரு தந்திரத்தைத் தீட்டியது |
| (5) | வா நரியே, உன் நண்பனுடன் சேர்ந்து இங்கு வந்துவிட்டாயே |
| (6) | நரி ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டது |
| (7) | எப்படியாவது கொடிய சிங்கத்திடமிருந்து தன்னைக் காப்பாற்றும் வழியைக் கூறும்படி கேட்டது ஆடு |
| (8) | ஒரு யானையையே கொல்லக்கூடிய ஆற்றல் இந்த ஆட்டிற்கு உள்ளதே என வியந்தது சிங்கம் |

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



17

## 'இ' பிரிவு

**<u>C5 சுயவிடைக் கருத்தறிதல்</u> (26 மதிப்பெண்கள்)**

***பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.***

இந்திய நாட்டின் வடக்கே அமைந்துள்ள நாடு திபெத். இந்நாட்டு மக்கள் திபெத்தியர் எனப்படுவர். இவர்களுக்குத் தெய்வங்கள்மீதும் மந்திரங்கள்மீதும் அதிக நம்பிக்கையுண்டு.

வயலில் வேலை தொடங்குவதற்கு முன்பும், வெளியில் போவதற்கு முன்பும் இவர்கள் நல்ல நேரமும் நல்ல சகுனங்களும் பார்ப்பதுண்டு. எந்தக் காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பும் இவர்கள் ஆண்டவனை வணங்குகிறார்கள். இல்லத்தில் புத்தர் பகவானின் சிலையை வைத்து, அதற்கு நாளெல்லாம் எண்ணெய் விளக்கை ஏற்றி வழிபடுகின்றனர். எனினும், பௌத்த மதம் ***<u>போதிக்கும்</u>*** கொல்லாமையை இவர்கள் பின்பற்றுவதில்லை. உயிரினங்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதால் சைவ உணவையே உட்கொள்ள வேண்டும் என்று இம்மதம் வலியுறுத்துகிறது. ஆனால், பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் திபெத்தியர்கள் மாமிசத்தை விரும்பி உண்கிறார்கள்.

திபெத்திய ஆண்களும் பெண்களும் முடியைப் பின்னலிட்டுக் கொள்கின்றனர். மேலும் நீலக்கல் காதணிகளையும் விரும்பி அணிந்துகொள்கின்றனர். இவை அவர்களுக்கு அதிர்ஷ்டத்தையும் நலமான வாழ்க்கையையும் வழங்கும் என்பது அவர்களது நம்பிக்கை. ஆனால்; மேலை நாடுகளின் ***<u>நவீனத்தின்</u>*** தாக்கத்தால் சில இளம்பெண்கள் தங்கள் தலைமுடியை மேற்கத்திய பாணியில் குட்டையாக வெட்டிக்கொள்கின்றனர்; பல்விதமான வண்ணக் கம்மல்களையும் அணிகின்றனர்.

திபெத்தியர்கள் காலையில் எழுந்ததும் நம்மைப்போல் பல் துலக்கமாட்டார்கள். இதற்குப் பதிலாக இவர்கள் <u>தேநீரில்</u> உப்பையும் வெண்ணெயையும் கலந்து



18/

அருந்துகின்றனர். உப்பு, கிருமிகளை அழித்து வாயைத் தூய்மைப்படுத்துகிறது; வெண்ணெய் உடலின் பலத்தை அதிகரிக்கிறது.

திபெத்தியர்கள் தம் ஆயுள் காலத்தில் குறைந்தது ஆறு அல்லது ஏழு முறை தங்கள் பெயர்களை மாற்றிக்கொள்கின்றனர். யாராவது மகான்களைக் காண நேர்ந்தால் அவர்களின் நினைவாகத் தங்கள் பெயர்களை மாற்றிக்கொள்கின்றனர். ஒரு குழந்தை நோய்வாய்ப்பட்டாலோ அல்லது அதற்கு ஆபத்தான காயம் ஏற்பட்டாலோ ஒரு புதுப் பெயர் அக்குழந்தைக்குக் கொடுக்கப்படுகிறது. உயிரைப் பறிக்கப் பெயர்ப் பட்டியலோடு வரும் எமன் இந்தப் புதிய பெயரைக் கண்டு, தான் தேடி வந்தது இந்தக் குழந்தை இல்லை என்று எண்ணிப் போய்விடுவானாம். இவர்களுக்கு இப்படி ஒரு வினோதமான நம்பிக்கை உண்டு.

திபெத்தியர்கள், தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு மிட்டாய்களைக் கொடுப்பார்கள். அவற்றிலிருந்து ஒன்றையாவது எடுத்துக் கொண்டால்தான் அவர்கள் வந்தவர்களுடன் பேசவே ஆரம்பிப்பார்கள். அதன் உட்கருத்து, விருபவர்களுக்கு இனிப்புத் தந்து அவர்களை இனிமையாக வரவேற்க வேண்டும் என்பதேயாகும். இப்படித் திபெத்தியர்களின் வாழ்க்கை முறையில் பல விசித்திரப் பழக்க வழக்கங்கள் அடங்கியுள்ளன.

*வினாக்கள்*

18 திபெத்தியர்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் என்பதை நாம் எவ்வாறு அறிகிறோம்? (3 மதிப்பெண்கள்)

19) திபெத்தியர்கள் பௌத்த மதத்தை முழுமையாகப் பின்பற்றுகிறார்களா? ஏன்? (3 ம.)

20) திபெத்திய வழிமுறைகளைப் பின்பற்றும் பெண்களிடமிருந்து நவீனத்தை விரும்பும் பெண்கள் எவ்வாறு வேறுபடுகின்றனர்?(3 ம.)

21) திபெத்தியர்கள் ஏன் பல் துலக்குவதில்லை? (4 ம.)

22) திபெத்தியர்கள் எத்தருணங்களில் தங்கள் பெயர்களை மாற்றிக்கொள்கிறார்கள்? அதற்கான காரணங்கள் யாவை? ( 5 ம.)

______________________________

______________________________

______________________________

23) திபெத்தியர்களின் வீடுகளுக்குச் செல்லும் விருந்தினர்கள் ஏன் இனிப்பை எடுக்க வேண்டும்? இப்பழக்கம் வலியுறுத்தும் பண்பு என்ன? (4 ம.)

______________________________

______________________________

______________________________

பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. போதிக்கும்: ______________

ஆ. நவீனத்தின் : ______________

P -6 உயர்தரம் தாள்- 2

வாழ்க்கையில் மிக உயர்ந்த ...
1)தழுவுகிறது 2) தொடங்குகிறோம் 3) சிறப்பற்றவை 4) ஒவ்வொரு
5) போட

6)உலகப் போரே காரணமாகும்.
7) வீரத்தையும் கொடைத்தன்மையையும் விளக்கமாக அறிந்து கொள்ளலாம்.
8)தூய்மையான சுற்றுப்புற சூழலை உருவாக்க முடியாது.
9) கடும் நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன.
10) உன்னுடைய 11) காலையில் 12)ராமுவால் 13) பணப்பையின்

14)3 15) 8 16) 6 17) 1
18) எந்தக் காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பும் திபெத்தியர்கள் ஆண்டவனை வணங்குகிறார்கள். மேலும் அவர்கள் இல்லத்தில் புத்தர் பகவானின் சிலையை வைத்து, அதற்கு நாளெல்லாம் எண்ணெய் விளக்கை ஏற்றி வழிபடுகின்றனர்.

19) திபெத்தியர்கள் பௌத்த மதத்தை முழுமையாகப் பின்பற்றுவதில்லை.பௌத்த மதம் கொல்லாமையை போதிகிறது.உயிரினங்களுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதால் சைவ உணவையே உட்கொள்ள வேண்டும் என்று இம்மதம் வலியுறுத்துகிறது. ஆனால் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இறைச்சியை விரும்பி உண்கிறார்கள். அதனால் அவர்கள் பௌத்த மதத்தை முழுமையாகப் பின்பற்றுவதில்லை.

20) திபெத்திய வழிமுறைகளைப் பின்பற்றும் பெண்கள் தங்களுடைய முடியைப் பின்னலிட்டுக் கொள்கிறார்கள். மேலும் அவர்கள் நீலக்கல் காதணிகளை அணிந்து கொள்கிறார்கள். ஆனால் நவீனத்தை விரும்பும் பெண்கள் தங்களுடைய தலைமுடியை மேற்கத்திய பாணியில் குட்டையாக வெட்டிக் கொள்வதோடு பலவிதமான வண்ணக் கம்மல்களை அணிகிறார்கள். இவ்வாறே திபெத்திய வழிமுறைகளைப் பின்பற்றும் பெண்களிடமிருந்து நவீனத்தை விரும்பும் பெண்கள் வேறுபடுகின்றனர்.

21) திபெத்தியர்கள் தேனீரில் உப்பையும் வெண்ணெயையும் கலந்து குடிக்கும்போது அதிலிருக்கும் உப்பு கிருமிகளை அழித்து வாயைச் சுத்தப்படுத்துவதாலும், அதிலிருக்கும் வெண்ணெய் உடலின் சக்தியை அதிகரிப்பதாலும் அவர்கள் பல் துலக்குவது இல்லை.

22)திபெத்தியர்கள் யாராவது மகான்களைக் காண நேர்ந்தால் அவர்களின் நினைவாகத் தங்கள் பெயர்களை மாற்றிக் கொள்கிறார்கள்.ஒரு குழந்தை நோய்வாய்ப்பட்டாலோ அல்லது அதற்கு ஆபத்தான காயம் ஏற்பட்டாலோ ஒரு புதுப்பெயர் அக்குழந்தைக்குக் கொடுக்கப்படுகிறது. உயிரைப் பறிக்கப் பெயர்ப் பட்டியலோடு வரும் எமன் இந்தப் புதிய பெயரைக் கண்டு, தான் தேடி வந்தது இந்தக் குழந்தை இல்லை என்று எண்ணிப் போய்விடுவான் என்ற வினோதமான நம்பிக்கை அவர்களிடையே உள்ளது. இவையே திபெத்தியர்கள் தங்கள் பெயரை மாற்றிக்கொள்ளக் காரணங்கள் ஆகும்.

23) திபெத்தியர்களின் வீடுகளுக்குச் செல்லும் விருந்தினர்கள் அவர்கள் அளிக்கும் மிட்டாய்களில் ஒன்றையாவது எடுத்துக் கொண்டால் தான் திபெத்தியர்கள் அவர்களுடன் பேசவே ஆரம்பிப்பார்கள்.வருபவைகளுக்கு இனிப்புத்தந்து அவர்களை இனிமையாக வரவேற்க வேண்டும் என்பதே இப்பழக்கம் வலியுறுத்தும் பண்பு ஆகும்.

24) வலியுறுத்தும்
25) புதுமையின்

P6

CA - 1 தேர்வுத்தாள் - 3

## உயர்தமிழ் (தாள் 1)

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்நதெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நான் கண்ட சாலை விபத்து**

எப்போது அந்த விபத்து நடந்தது? உன் மனநிலை எப்படி இருந்தது? அந்த இடத்தில் நீ ஆற்றிய உதவி என்ன? இக்கேள்விகளைக் கட்டுரை எழுதப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

"அமுதா! அமுதா! சீக்கிரம் கதவைத் திற! பாட்டி மயங்கி விழுந்துவிட்டார்," என்ற வார்த்தைகளைக் கேட்டதும் நான் நிலைதடுமாறினேன். ..............................

(முற்றும்)

P 6

CA- 1 தேர்வுத்தாள் - 3

'அ' பிரிவு

**A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

இளவரசன் காட்டில் தனியாக வேட்டையாடச் சென்றான். அங்கு திடீரென மழை பெய்யவே, அவனால் திரும்பிப் போக முடியவில்லை. அவன் அங்கு இருந்த ஒரு குடிசையில் **(Q1)**ஒதுங்கினாள். அங்கு வசித்து வந்த ஒரு விறகுவெட்டிக்கு அவர் தான் இந்நாட்டு இளவரசன் என்று தெரியாது; ஆனாலும் இளவரசனை நன்கு **(Q2)**உபசரிக்கிறான். இளவரசன் விறகுவெட்டி தந்த பழைய ரொட்டியை உண்டு தன் பசியைப் போக்கிக் கொண்டான். ஊர் **(Q3)**திரும்பியது இளவரசன் நடந்ததை அரசனிடம் கூறினான். அரசன் அந்த விறகுவெட்டியை அரண்மனைக்கு வரச் சொல்லி, அவனுக்கு மாலை **(Q4)**அணிவித்த மரியாதை செலுத்தினான். விறகுவெட்டிக்கு ஒரே **(Q5)**அச்சரியம்! அரசன் அவனுக்கு ஒரு சந்தனக் காட்டைப் பரிசாகக் கொடுத்தான். அங்கே உள்ள சந்தன மரங்களை வெட்டி விற்றுப் பிழைத்துக் கொள்ளும்படிக் கூறினான்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

A2 <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6 அனுமதியின்றி படம் பார்க்கச் சென்ற ரவியை அப்பா கண்டித்தார்.
அனுமதியின்றி படம் பார்க்கச் சென்றதால் ரவி ____________________

____________________________________________

Q7 நிலம் சரிந்ததால் வீடுகளில் இருந்த பலர் தம் உயிரை இழந்தனர்.
வீடுகளில் இருந்த பலர் உயிர் இழந்ததற்கு ____________________

____________________________________________

Q8 இஞ்சிச் சாறு குடித்தால் உடம்பில் உள்ள வாய்வு நீங்கும்.
உடம்பில் உள்ள வாய்வைப் போக்க ____________________

____________________________________________

Q9 தச்சன் அழகிய வேலைபாடுகளுடைய அலமாரியைச் செய்தான்.
அழகிய வேலைபாடுகளுடைய அலமாரி ____________________

____________________________________________

A3 <u>வேற்றுமை உருபுகள்</u> (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

உதயாவும் சிவாவும் நண்பர்கள். அவர்கள் இருவரும் விஞ்ஞானிகள். அவர்கள் இயந்திரக் கிளி ஒன்றை உருவாக்கினர். அந்த இயந்திரக் (Q10)________________ (கிளி) ஒருவரது பெயரையும் பிறந்த தேதியையும் சொன்னால், அவற்றை வைத்து அவர்களைப் பற்றிய சில விவரங்களைச் சொல்லும். பிறகு, பிறந்த வருடத்தைக் கூறினால் அது அவர்கள் (Q11)________________ (வாழ்க்கை) நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளைச் சொல்லிவிடும். உதயாவும் சிவாவும் அந்த அற்புதக் கிளியை உருவாக்க மூன்று (Q12)________________ (ஆண்டுகள்) மேல் உழைத்தார்கள். பலன் எளிதில் கிட்டவில்லை. அதனால், இருவரும் அவர்களது முயற்சியிலிருந்து விலகிக் கொள்ள முடிவு செய்தனர். ஆனால், அவர்களது மேற்பார்வையாளரின் (Q13)________________ (ஊக்குவிப்பு) இருவரும் தம் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செயல்பட்டனர். அதன் விளைவே இன்று அவர்கள் முன்னால் இருக்கும் அற்புத இயந்திரக் கிளியாகும்!

'ஆ' பிரிவு

**B4** **கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.**

பேச்சுப்போட்டியில் தோல்வி அடைந்த சுமதி கவலை அடைந்தாள். அவள் அதைப் பற்றி நினைத்துக்கொண்டே பேருந்து நிறுத்துமிடத்துக்குச் சென்றாள். (Q14)_________________________. சிறிது நேரத்தில் பேருந்து வழக்கமான வழியைவிட்டு வேறு வழியில் சென்றது. சுமதி குழப்பம் அடைந்தாள். (Q15)_________________________; மற்றவர்களைக் கேட்கவும் அவளுக்கு வெட்கமாக இருந்தது. பேருந்து சென்ற சாலையின் இரு புறங்களிலும் இருந்த கட்டடங்களை அவள் பார்த்தாள். அது அவளுக்குப் பழக்கப்பட்ட இடமாகத் தெரியவில்லை. (Q16)_________________________. அச்சம் அடைந்த அவள் அடுத்த நிறுத்தத்தில் இறங்கினாள். (Q17)_________________________. அதனால், வாடகை உந்துவண்டியில் ஏறிச் செல்லவும் வழி இல்லை என்பதை சுமதி உணர்ந்தாள். அவள் அங்கிருந்து காணப்பட்ட சாலைச் சந்திப்பை நோக்கி நடந்தாள். எங்கும் இருட்டத் தொடங்கியது.

(1) அவள் ஒரு வழிப்போக்கரை அணுகினாள்.

(2) பேருந்து வந்ததும் அவள் அதனுள் ஏறி அமர்ந்தாள்.

(3) அவள் தொடர்ந்து பயணம் செய்ய முடிவெடுத்தாள்.

(4) அவளது சட்டைப் பையினுள் இருபது காசுகள்தான் இருந்தன.

(5) பேருந்து கூட்டமாக இருந்ததால் அவள் அதில் ஏறத் தயங்கினாள்.

(6) தவறான பேருந்தில் தான் பயணம் செய்வதை அவள் உறுதி செய்தாள்.

(7) பேருந்து ஓட்டுநருக்கு வழி தெரியவில்லையோ என்று நினைத்தாள்.

(8) பேருந்தினுள் உட்கார்ந்திருந்ததால் அவளால் பேருந்தின் எண்ணைப் பார்க்க முடியவில்லை.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

'இ' பிரிவு

C5 <u>சுயவிடைக் கருத்தறிதல்</u> (26 மதிப்பெண்கள்)

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.**

'நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று'

இக்குறள் மக்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டியதன் *<u>முக்கியத்துவத்தை</u>* வலியுறுத்துகிறது. இவ்வுலகில் பிறந்த யாரும் பிறர் உதவியின்றித் தனித்து வாழ இயலாது. ஏனெனில் நாம் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வகையிலேயே இச்சமூகம் அமைந்துள்ளது. நாம் மற்றவர்களிடமிருந்து பல உதவிகளைப் பெற்றுக்கொள்கிறோம். தக்கச் சமயத்தில் நமக்கு உதவி செய்பவர்களை நாம் என்றென்றும் மறக்கக் கூடாது. ஒருவர் நமக்குச் செய்த உதவி சிறிதாக இருந்தாலும் நாம் அதைப் பெரிதாகக் கருதிப் போற்ற வேண்டும். இதைத்தான் நன்றியுணர்வு என்கிறோம். இவ்வுணர்வு மனிதர்களிடம் மட்டுமல்ல மற்ற உயிர்களிடமும் காணப்படுகிறது.

நாம் பிறருக்கு உதவி செய்யும்போது அவர்கள் நமக்கு நன்றி கூறுவதுண்டு அல்லவா? அப்போது நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோம். அது போல பிறர் நமக்கு உதவி செய்யும்போது நாமும் நன்றி கூற வேண்டும். ஒருவர் செய்த உதவியை வாழ்நாள் முழுவதும் மறக்காமல் இருப்பதே நற்பண்பாகும்.

நாம் இத்தகைய நன்றியுணர்வை நாய்களிடமும் காணலாம். நாய் நன்றியுள்ள விலங்கு. நாம் அதற்குக் கொடுக்கும் உணவையும் நாம் அதனிடம் *<u>செலுத்தும்</u>* அன்பையும் அது வாழ்நாள் முழுவதும் மறப்பதே இல்லை. சில வேளைகளில் நாம் அதை அடித்துவிட்டாலும்கூட அது அதைப் பொருட்படுத்தாது. அது வாலை ஆட்டிக்கொண்டு நம்மை நன்றியுடன் சுற்றிச் சுற்றி வரும். தக்கச் சமயத்தில்

நாய் தன்னை ஆதரித்தவனைக் காக்கவும் அவனுக்காகத் தன் உயிரை விடவும் தயங்காது.

ஆனால், யானை நாயைப் போல அல்ல; அது மாறுபட்ட குணம் உடையது. அதை நாம் எவ்வளவுதான் அன்புடன் வளர்த்தாலும் அதை நாம் எப்போதாவது துன்புறுத்தி விட்டால், அதை மறக்காமல் மனத்திலேயே வைத்துக்கொண்டு நம்மைப் பழி வாங்கிவிடும். யானையைப்போல் பழிவாங்கும் குணம் கொண்டவர்களாக நாம் இருக்கக்கூடாது.

தென்னைமரம் கன்றாக இருக்கும்போது நாம் ஊற்றும் தண்ணீரை உறிஞ்சுகிறது. பின்னர், அது மரமானதும் அந்நீரைச் சுவைமிக்க இளநீராக நமக்குக் கொடுக்கிறது. இது தென்னையின் நன்றி மறவாத செயலைக் காட்டுகிறது அல்லவா? ஆகவே, நாமும் நம் பெற்றோர், ஆசிரியர், உடன்பிறந்தோர், நண்பர்கள் ஆகிய யாவருக்கும் தென்னை மரத்தைப்போல் பயனுள்ளவர்களாகவும் நன்றியுள்ளவர்களாகவும் வாழ வேண்டும். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்ற பழமொழிக்கு ஏற்ப நாம் என்றும் நமக்கு உதவி செய்தவர்களை மறக்கக்கூடாது.

<u>வினாக்கள்</u>

Q18. மனிதன் ஏன் தனியாக வாழ முடியாது? (3)

______________________________

______________________________

______________________________

______________________________

Q19. நன்றியுணர்வு என்பது என்ன? (2)

Q20. நன்றியுணர்வுக்கு எடுத்துக்காட்டாக நாயைக் குறிப்பிடுவது ஏன்? (5)

Q21. யானையின் இயல்பு நாயின் தன்மையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? (4)



31

Q22. தென்னைமரம் தன்னை வளர்ப்பவருக்கு எவ்வாறு நன்றி தெரிவிக்கிறது? (4)

Q23. தென்னைமரத்திடமிருந்து நாம் எத்தகைய நற்பண்புகளைக் கற்றுக்கொள்ளலாம்? (4)

Q24 பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. முக்கியத்துவத்தை - ______________ (2 மதிப்பெண்கள்)

ஆ. செலுத்தும் - ______________ (2 மதிப்பெண்கள்)

(முற்றும்)



32

P6 CA - 1 தாள்-3

... PRIMARY SCHOOL

**P6 HIGHER TAMIL**

**ANSWER KEY**

**A1** <u>பிழை திருத்தம்</u>

1. ஒதுங்கினான்
2. உபசரித்தான்
3. திரும்பியதும்
4. அணிவித்து
5. ஆச்சரியம்

**A2** <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u>

6. அப்பாவால் கண்டிக்கப்பட்டான்.
7. நிலம் சரிந்ததே காரணம் ஆகும்.
8. இஞ்சிச் சாறு குடிக்க வேண்டும்.
9. தச்சனால் செய்யப்பட்டது.

**A3** <u>வேற்றுமை உருபுகள்</u>

10. கிளியிடம்
11. வாழ்க்கையில்
12. ஆண்டுகளுக்கு
13. ஊக்குவிப்பால் / ஊக்குவிப்பினால்

**B4** <u>கருத்தறிதல்</u>

14. (2)
15. (8)
16. (6)
17. (4)

C5 <u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

18. மனிதர்கள் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வகையிலேயே இச்சமூகம் அமைந்துள்ளதால் மனிதனால் பிறர் உதவியின்றித் தனியாக வாழ முடியாது.

19. தக்கச் சமயத்தில் நமக்கு உதவி செய்பவர்களை நாம் என்றென்றும் மறக்கக்கூடாது. இதுவே நன்றியுணர்வு என்பதாகும்.

20. நாம் நாய்க்கு அளிக்கும் உணவையும் அதனிடம் செலுத்தும் அன்பையும் அது வாழ்நாள் முழுவதும் மறப்பதே இல்லை. சில வேளைகளில் நாம் அதை அடித்துவிட்டாலும்கூட அது அதைப் பொருட்படுத்தாமல் வாலை ஆட்டிக்கொண்டு நம்மை நன்றியுடன் சுற்றிச் சுற்றி வரும். தக்கச் சமயத்தில் நாய் தன்னை ஆதரித்தவனைக் காக்கவும் அவனுக்காகத் தன் உயிரை விடவும் தயங்காது. இதனால் தான் நன்றியுணர்வுக்கு எடுத்துக்காட்டாக நாயைக் குறிப்பிடுகிறோம்.

21. யானை நாயைப்போல் நன்றியுணர்வு கொண்டது இல்லை. அதை நாம் எவ்வளவுதான் அன்புடன் வளர்த்தாலும் அதை நாம் எப்போதாவது துன்புறுத்திவிட்டால், அதை மறக்காமல் மனத்திலேயே வைத்துக்கொண்டு நம்மைப் பழி வாங்கிவிடும். இவ்வாறுதான் யானையின் இயல்பு நாயின் தன்மையிலிருந்து வேறுபடுகிறது.

22. தென்னை கன்றாக இருக்கும்போது அதற்குத் தண்ணீர் ஊற்றியவரை அது மறப்பதில்லை. அந்நீரை அது உறிஞ்சிவிட்டு அது மரமானதும் சுவைமிக்க இளநீரை வளர்த்தவருக்குக் கொடுக்கிறது.

23. தென்னை மரத்திடமிருந்து நாம் பயனுள்ளவர்களாகவும் நன்றியுள்ளவர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ளலாம். இப்பண்புகளை நாம் நம் பெற்றோர், ஆசிரியர், உடன்பிறந்தோர், நண்பர்கள் ஆகியோரிடம் வெளிக்காட்டலாம்.

24) அ. அவசியத்தை ஆ. காட்டும்

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் <u>ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

<u>வினா 1</u>

<u>'என் பள்ளயில் நடைபெற்ற இன நல்லிணக்க நாள் கொண்டாட்டம்'</u> என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுது.

(அது எப்போது கொண்டாடப்பட்டது, அதில் யாரெல்லாம் கலந்துகொண்டார்கள், சிறப்பு நிகழ்ச்சியாக அன்று என்ன நடந்தது, அந்தக் கொண்டாட்டத்தில் நீ என்னவெல்லாம் அறிந்துகொண்டாய் போன்ற விவரங்களை நீ உன் கட்டுரையில் விளக்கி எழுதலாம்.)

<u>வினா 2</u>

கீழே ஒரு கதையின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அக்கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்கவும்.

"வேண்டாம்! வேண்டாம்!" என்று நண்பர்கள் கூறியும் அதைக் கேட்காமல், உதவி தேடி புக்கிட் தீமா மலையின் அடர்ந்த பகுதியை நோக்கிச் சென்றேன். நான் படபடப்புடன் நடந்து கொண்டிருந்தபோது பின்னால் ஏதோ சலசலப்பு கேட்டு இதயம் வேகமாக அடித்துக்கொள்ள திரும்பினேன்........................



35

தேர்வுத்தாள் – 4



(அ பிரிவு)

**A1. பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.

முகத்திற்கு மேலும் அழகு சேர்ப்பவை நம் பற்கள். பற்கள் இல்லாத Q(1) சிரிப்பு நாம் ஒருபோதும் எண்ணிப்பார்க்க முடியாது. அப்படிப்பட்ட பற்களுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவு வகைகளையே பெரியவர்களும் சிறியவர்களும் Q(2) விரும்புகிறார். ஒவ்வொரு Q(3) நாளையும் பற்களை இரண்டு முறையாவது துலக்க வேண்டும். இனிப்புப் பண்டங்களையும் Q(4) குளிர்பானங்களும் குறைத்து உட்கொள்ள வேண்டும். ஆண்டிற்கு இரண்டு முறையாவது பல் மருத்துவரிடம் Q(5) சென்று வேண்டும்.

| | |
|---|---|
| Q(1) | |
| Q(2) | |
| Q(3) | |
| Q(4) | |
| Q(5) | |

**A2.** <u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> <u>(8 மதிப்பெண்கள்)</u>
*பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.*

Q6) கட்டட ஊழியரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது.

கட்டட ஊழியர் கவனமாக இருந்திருந்தால் ______________________

______________________________________________ ( )

Q7) பணிப்பெண் ஏணியில் ஏறும்போது கால்தடுக்கிக் கீழே விழுந்தார்.

பணிப்பெண் ஏணியில் ஏறும்போது கால்தடுக்கியதே அவர் ______________

______________________________________________.

Q8) சிங்கப்பூரப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியை ராதா மேற்கொள்ள விரும்பினார்.

சிங்கப்பூரப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வியை மேற்கொள்வது

______________________________________________

______________________________________________. ( )

Q9) சிங்கப்பூர் வரலாற்றுக் கண்காட்சிக் கூடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தார்.

சிங்கப்பூர் வரலாற்றுக் கண்காட்சிக் கூடம் நாடாளுமன்ற உறுப்பினரால்

______________________________________________

______________________________________________.

*A3. வேற்றுமை உருபுகள் ( 8 மதிப்பெண்கள்)*
*பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.*

வானத்தில் கழுகொன்று வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அப்போது ஒரு ஆட்டுக்குட்டி Q(10)______________ (தரை) படுத்திருந்தது. அதைக் கழுகு கண்டது. அது உடனே கீழே பறந்து வந்தது. அது Q(11)______________ (ஆட்டுக்குட்டி) தூக்கிக் கொண்டு சென்றது.

அருகிலிருந்த மரத்தில் காகமொன்று இருந்தது. அது இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தது. Q(12) ______________ (காகம்) ஒரு யோசனை தோன்றியது. அது கழுகைப்போல் தானும் செய்ய விரும்பியது.

அவ்வேளையில் அங்குச் சில செம்மறியாடுகள் மேய்ந்து கொண்டிருப்பதைக் காகம் கண்டது. அது சீக்கிரமாகப் பறந்து வந்து ஓர் ஆட்டின் மேல் அமர்ந்தது. அது செம்மறியாட்டைத் தூக்க முயன்றது. ஆனால், Q(13) ______________ (காகம்) முடியவில்லை. அதன் கால்கள் செம்மறியாட்டின் உரோமங்களில் சிக்கிக் கொண்டன. அது பறக்க முடியாமல் தவித்தது.



38

'ஆ' பிரிவு

**B4. முன்னுணர்வுக் கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஓவியம் தீட்டுவது ஓர் உயர்ந்த அழகுக் கலையாகும். ஓவியம் வரைபவர்கள் தத்தம் மனங்களில் எண்ணியதையும் கண்ணால் கண்டதையும் படங்களாக வரைவார்கள். Q(14)________________. எனவேதான், இயற்கையிலேயே ஓவியத்தில் ஆர்வம் உள்ளவர்களே சிறந்த ஓவியராக ஆகிறார்கள். அதனை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு நல்ல பயிற்சியும், அனுபவமும் வேண்டும்.

பழங்காலத்தில் சுவரின் மேல் சித்திரம் வரையும் வழக்கம் அதிகமாக இருந்தது. Q(15)________________. 'சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் வரைய வேண்டும்?' என்ற பழமொழி அதனால்தான் வந்தது. ஓவியங்கள் தீட்டுவதற்குத் தூரிகைகளும், வண்ணப் பசைகள் அல்லது வண்ணக் குழம்புகளும் வேண்டும். தண்ணீரில் குழைக்கும் வண்ணம், எண்ணெயில் குழைக்கும் வண்ணம் என வண்ணங்களில் இருவகை உண்டு. Q(16)________________.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஆதிமக்கள் தாம் வாழ்ந்து வந்த குகைகளின் சுவர்களில் தம் வாழ்க்கை முறைகளைச் சித்தரிக்கும் காட்சிகளையும் தாங்கள் வேட்டையாடிய மிருகங்களின் படங்களையும் வரைந்து வந்தனர். Q(17)________________. இவற்றைக் கொண்டுதான் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் ஆதிகால தொடர்புடைய பலதரப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றனர். இந்தியாவில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்கள் பானை ஓட்டின் மேல் தீட்டிய அழகிய ஓவியங்களைக்கூட ஆய்வாளர்கள் பல மாநிலங்களில் கண்டுபிடித்துள்ளனர்.

1. எல்லாருமே ஓவியராக முடியும்.
2. அதனால்தான், அவர்கள் குகைகளின் சுவர்களில் பலவகையான சித்திரங்களை வரைந்திருந்தார்கள்.
3. உலர்ந்து இறுகிய வண்ண மெழுகுகளாலும் ஓவியங்கள் தீட்டுகின்றனர்.
4. எல்லாருமே ஓவியராக முடியாது.
5. அவ்வுருவங்கள் அனைத்துமே அழிந்துவிட்டன.
6. உலர்ந்து இறுகிய வண்ணப் பென்சில்களாலும் ஓவியங்கள் தீட்டுகின்றனர்.
7. அவ்வுருவங்கள் இன்றும் அழியாமல் உள்ளன.
8. அதனால்தான், அவர்களின் எண்ணங்களையும் அனுபங்களையும் பலவகையான சித்திரங்களாக வரைந்திருந்தனர்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



39

'இ' பிரிவு

C5. சுயவிடைக் கருத்தறிதல் (26 ம)

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது

இந்தியாவின் வடக்கு எல்லையாக இமயமலை விளங்குகிறது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது உலகிலேயே உயரமான மலைத்தொடர் ஆகும். 'இமாலயம்' என்றால் பனியின் இருப்பிடம் என்று பொருள். இமயமலையின் உயரமான பகுதிகளில் எப்போதும் பனி உறைந்து இருப்பதால் இப்பெயர் வந்தது.

இமயமலை ஒரே தொடர்ச்சியான மலையாக இல்லை. இது அடுக்கு அடுக்காக அமைந்த பல மலைத் தொடர்களைக் கொண்டது. இதன் அகலம் சுமார் 250 கிலோமீட்டர். இமயமலையின் மொத்த நீளம் கிழக்கு மேற்காகச் சுமார் 2400 கிலோ மீட்டர். இதில் எழுபதுக்கும் மேற்பட்ட உயரமான சிகரங்கள் உள்ளன. இவற்றுள் எவரஸ்ட் சிகரம் உலகிலேயே மிக உயரமானது. இங்கு வேறு பல உயரமான சிகரங்களும் உண்டு. அவற்றுள் ஒன்று கைலாயம் ஆகும். இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் புனிதமான இடம் கைலாயம். இந்தச் சிகரத்திற்கு அருகே அழகான ஏரி ஒன்று உள்ளது. அழகிய அன்னப் பறவைகள் பலவற்றி இந்த ஏரியில் காணலாம்.

உலகப் புகழ் பெற்ற காஷ்மீரப் பள்ளத்தாக்கு இந்த மலையில் இருக்கிறது. சிம்லா, டார்ஜீலிங் போன்ற மலைப் பிரதேசங்களும் இங்கு உள்ளன. கோடையில் வெயில் அதிகமாக இருப்பதால், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் இங்கு வந்து தங்குகிறார்கள்; முக்கியமாக இங்கு வருபவர்கள் இயற்கைச் சூழலையும், அதன் பிரமாண்ட அழகினையும் ரசித்திட வருகிறார்கள். இங்கு வீசும் தூய்மையான காற்று, மனத்திற்கும் உடலுக்கும் ஓர் இதமான உணர்வைத் தருகிறது. இமயமலையில் இருபதுக்கும் மேற்பட்ட ஆறுகள் உள்ளன. மேலும் இமயமலைப் பகுதியில் 'தேவதாரு', 'ஓக்' என்னும் மரங்கள் மிகுதியாக வளர்கின்றன. அதன் மலைச் சரிவுகளில் தேயிலைப் பயிராகிறது. பயிர்கள் விளைவதற்கு ஏற்ற பருவநிலையும் உயர்தரமான மண்ணும் இங்குக் கிடைப்பதால் தேயிலை மிகுதியாக விளைகிறது. இந்தியாவின் வடக்கு எல்லையில் ஓர் இயற்கை பூமியாக விளங்குகிறது இமயமலை. இத்தகைய சிறப்பான ஓர் இடத்தை இந்தியாவில் வேறு எங்கும் காண முடியாது என்று கூறலாம்.

வினாக்கள்

Q18. இமயமலைக்கு, 'இமாலயம்' எனப் பெயர் வரக் காரணம் என்ன? (3 ம.பெ)

19. இமயமலையைப் பற்றிய மூன்று தகவல்களைக் குறிப்பிடவும். (4 ம.பெ)

Q20. மற்றச் சிகரங்களைவிடக் கைலாயச் சிகரம் ஏன் புகழ் மிக்கது? (4 ம.பெ)

Q21. முக்கியமாக, சிம்லா, டார்ஜீலிங் போன்ற மலைப்பிரதேசங்களுக்கு வருவோர் எதற்கு வருகின்றனர்? (4 ம.பெ)



41

Q.22. இமயமலைச் சரிவுகளில் தேயிலை பயிராவதற்கு எவை துணை புரிகின்றன? (4 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q23. இமயமலையின் தனிச்சிறப்பு என்ன? (3 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q24. பொருள் எழுது (4 மதிப்பெண்கள்)
பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. மேற்பட்ட - ____________________ ( 2 ம. பெ)

ஆ. ஏற்ற - ____________________ ( 2 ம.பெ)



42

## P6 CA 1 Paper - 4

முகத்திற்கு மேலும் அழகு..........

1. சிரிப்பை 2. விரும்புகிறார்கள் 3. நாளும் 4. குளிர்பானங்களையும்
5. செல்ல

6. விபத்து ஏற்பட்டிருக்காது.

7. அவர் கீழே விழுந்ததற்குக் காரணமாகும்.

8. ராதாவின் விருப்பம்.

9. அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

10. தரையில் 11. ஆட்டுக்குட்டியை 12. காகத்திற்கு 13. காகத்தால்

14. 4 15. 2 16. 3 17. 7

18. 'இமாலயம்' என்றால் பனியின் இருப்பிடம் மற்றும் இமயமலையின் உயரமான பகுதிகளில் எப்போதும் பனி உறைந்திருக்கும். இதுவே இமயமலைக்கு 'இமாலயம்' என்று பெயர் வரக் காரணமாகும்.

19. இமயமலை அடுக்கு அடுக்காக பல மலைத் தொடர்களைக் கொண்டது. இந்தத் தொடர்களின் அகலம் 250 கிலோமீட்டர், நீளம் கிழக்கு மேற்காக 2400 கிலோமீட்டர். மற்றும் இதில் எழுபதுக்கும் மேற்பட்ட உயரமான சிகரங்கள் உள்ளன.

20. இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் புனிதமான இடம் கைலாயம். இந்தச் சிகரத்தின் அருகே அழகான ஏரி ஒன்று உள்ளது. அழகிய அன்னப் பறவைகள் பலவற்றை ஏரியில் காணலாம். அதனால் மற்ற சிகரங்களைவிடக் கைலாயச் சிகரம் புகழ் மிக்கது.

21. சிம்லா, டார்ஜீலிங் போன்ற மலைப் பிரதேசங்களில் உள்ள இயற்கைச் சூழலையும், அதன் பிரமாண்ட அழகினையும் ரசிப்பதற்காகவே முக்கியமாக இங்கு வருகின்றனர்.

22. இமயமலைச் சரிவுகளில் பயிர்கள் விளைவதற்கேற்ற பருவ நிலையும் உயர் தரமான மண்ணும் இருப்பதால் இவை தேயிலை பயிராவதற்குத் துணை புரிகின்றன.

23. இந்தியாவின் வடக்கு எல்லையில் ஓர் இயற்கை பூமியாக விளங்குவதே இமயமலையின் தனிச்சிறப்பாகும்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. அதிகமான
ஆ. தகுதியான

தொடக்கப்பள்ளி

தொடக்கநிலை 6

தேர்வுத்தாள் - 5

உயர்தமிழ்

P6/HTL

PART 2

பெயர் : ______ ( ) மதிப்பெண் : ________ / 60

வகுப்பு : P6/ ____ நேரம் : 1 hr 20mins

***கட்டளைகள்***

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

## தேர்வுத்தாள் - 5

### 'அ' பிரிவு

**<u>பிழை திருத்தம்</u> ( 10 மதிப்பெண்கள்)**
**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.**

அமெரிக்காவில் நியூ யார்க் துறைமுகத்தில் உள்ள சுதந்திர தேவியின் சிலை உலகப் புகழ் பெற்றது. சுதந்திர தேவி **(Q1)** <u>கம்பீரமான</u> வலது கையை, வானை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கிறாள். அக்கையில் ஒரு பெரிய பந்தம் **(Q2)** <u>இருக்கும்.</u> இடது கையில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் ஒரு பத்திரம் இருக்கிறது. அப்பத்திரத்தில் அமெரிக்கா சுதந்திரம் அடைந்த **(Q3)** <u>தாதி</u> பொறிக்கப்பட்டுள்ளது. சிலையின் **(Q4)** <u>தழையைக்</u> கிரீடம் அலங்கரிக்கிறது. அச்சிலையின் காலடியில் ஓர் **(Q5)** <u>உடைந்து</u> சங்கிலி கிடக்கிறது. உலகிலேயே பெரிய சிலை இது.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



46

**<u>வாக்கியங்களை முடித்து எழுதுதல்</u> (8 மதிப்பெண்கள் )**
**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.**

6. கனிவாகப் பேசும் ஒருவரை எல்லாரும் விரும்புவர்.

   எல்லாரும் நம்மை விரும்ப வேண்டுமென்றால் நாம் ____________

   ________________________________________________

7. விண்ணில் இன்னும் சில நாட்களில் வளர்பிறை தெரியும்.

   வளர்பிறை தெரிய இன்னும் ________________________

   ________________________________________________

8. கீழே கிடந்த பணப்பையை வழிப்போக்கர் கண்டெடுத்தார்.

   வழிப்போக்கரால் கீழே கிடந்த ______________________

   ________________________________________________

9. நோய்க்கிருமிகள் பற்களில் ஓட்டைகளை ஏற்படுத்துகின்றன.

   பற்களில் ஓட்டை ஏற்பட ____________

   ________________________________________________

( )



47

**A3 <u>வேற்றுமை உருபுகள்</u> (8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.**

கடல், ஆறு, குளம் ஆகியவற்றிலுள்ள நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறுகிறது. வானத்தில் நீராவி (Q10)_______________(காற்று) கலந்து குளிர்ச்சி அடைகிறது. குளிர்ந்த நீராவி மழையாகப் பெய்கிறது. மழை நமக்குத் தண்ணீரைத் தருகிறது. தண்ணீர் ஓர் அரிய பொருள். தண்ணீர் இல்லாவிட்டால் (Q11)_______________(உயிரினங்கள்) உயிர் வாழ முடியாது. நாம் பயன்படுத்தும் நீர் (Q12) _______________ நீர்த்தேக்கம்) வருகிறது. அதில் குறிப்பிட்ட (Q13) _______________ (அளவு) தான் நீரை வைக்க முடியும். நாம் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தாவிட்டால் நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் தீர்ந்துவிடும். பிறகு நாம் தண்ணீர் இல்லாமல் சிரமப்பட வேண்டும்.



48

## ‘ஆ’ பிரிவு

### B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

கண்ணனுக்குக் கல்வியில் அவ்வளவாக ஆர்வம் இல்லை. காற்பந்து விளையாட்டு அவனுக்கு மிகவும் பிடிக்கும். (Q14)__________________. ஆசிரியர் கொடுக்கும் வேலைகளை அவன் ஒழுங்காகச் செய்யமாட்டான். (Q15)__________________. ஒவ்வொரு மாதாந்திரத் தேர்விலும் அவன் குறைந்த மதிப்பெண்களைப் பெற்று வந்தான். ஆசிரியர் எவ்வளவோ புத்திமதி கூறியும் அவன் திருந்தவில்லை.

(Q16)__________________. அப்போது அவன் பெற்றோர் வீட்டில் இருந்தனர். ஆசிரியர் அவர்களிடம் தம்மை அறிமுகம் செய்து கொண்டார். (Q17)__________________. எல்லாவற்றையும் கேட்ட கண்ணனின் பெற்றோர் மிகுந்த ஆத்திரம் அடைந்தனர். அவர்கள் கண்ணனுக்கு அறிவுரை கூறினர். அவர்கள் எப்படியும் அவனைத் திருத்துவதாக உறுதிக் கூறிய பின் ஆசிரியர் விடைப்பெற்றுச் சென்றார்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)



49

(1) ஒருநாள் ஆசிரியர் கண்ணனின் வீட்டுக்கு வந்தார்.

(2) பின்னர் கண்ணனுக்கு வீட்டுப்பாடம் செய்ய உதவினார்.

(3) தன் வேலையை முழு ஈடுபாட்டுடன் செய்து ஆசிரியரிடம் கொடுப்பான்.

(4) பள்ளியில் ஆசிரியர் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கும் போது கூட அவன் காற்பந்து விளையாட்டுப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பான்.

(5) பின்னர் அவர்களிடம் தாம் வந்த நோக்கத்தை விளக்கினார்.

(6) ஒருநாள் ஆசிரியர் கண்ணனின் பெற்றோரைப் பள்ளிக்கு அழைத்தார்.

(7) பள்ளியில் ஆசிரியர் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கும் போது மட்டும் அவன் கவனம் செலுத்துவான்.

(8) ஏதோ கடமைக்காக மனத்தில் பட்டவாறு எழுதிக்கொண்டு போய் ஆசிரியரிடம் கொடுப்பான்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |



50

C5 சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)
பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.

உலகில் அறிஞர் பெருமக்கள் பலர் அவ்வப்போது தோன்றி, மக்களுக்கு நல்வழி காட்டியுள்ளனர். அவர்கள் சொல்லால் மட்டுமின்றிச் செயலாலும் மற்றவர்க்கு எடுத்துக்காட்டாய் விளங்கினர். அவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் கன்பூசியஸ் (Confucious) என்னும் சீனத் தத்துவ ஞானியாவார்.

கன்பூசியஸ் கி.மு. 551இல் சீன நாட்டில் பிறந்து வளர்ந்தார். அவர் கல்வி கற்பதில் <u>நாட்டம்</u> கொண்டிருந்தார். கற்பவை அனைத்தையும் கசடறக் கற்கவேண்டும் என்ற எண்ணம் இளமையிலேயே அவருக்கு இருந்தது. அதனால் ஆசிரியர் பலரிடம் சென்று பணிவுடன் கல்வி கற்றார்; பின்னர் ஆசிரியராகவும் பணியாற்றினார். தம்மிடம் கல்வி கற்ற மாணவர்களுக்கு வரலாறு, மரபுவழிப் பழக்க வழக்கங்கள், இசை போன்ற பாடங்களைக் கற்பித்தார். மாணவர்களில் ஏழை, செல்வர் என்ற பாகுபாடின்றி எல்லாரையும் ஒன்றாகவே மதித்துக் கல்வி கற்பித்தார். இவரிடம் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றிருக்கின்றனர்.

பிறகு ஆசிரியர் பணியை விட்டு விலகி, அரசாங்க அலுவலில் ஈடுப்பட்டு அல்லும் பகலும் உழைத்தார். அரசாங்கத்தில் பல பதவிகள் அவரை நாடி வந்தன. அவற்றில் அவர் சிறந்து விளங்கினார். அதனால் அவர் புகழ் மேன்மேலும் பரவியது. இதனைக் கண்டு பலர் பொறாமை கொண்டனர். இதை அறிந்த கன்பூசியஸ் அரசாங்கப் பதவியை உடனே துறந்தார்.

அரசாங்க வேலையை விட்டு விலகிய போதிலும் கூட கன்பூசியஸ் மனம் தளரவில்லை. பொறாமையும் பூசலும் கொண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டு அவர் மன வேதனை அடைந்தார்.

அதனால் மக்களுக்கு அறிவுரைகளைப் புகட்டும் பணியில் ஈடுபட்டார அவர்தம் அறநெறிக் கருத்துகள் நாடு முழுவதும் பரவின.

அவர் இவ்வுலகில் மனிதன் மகிழ்ச்சியோடும் நெறியோடும் வாழ்வது எப்படி என்பதைத் தெளிவாக விளக்கினார். மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று போதித்தார். ஒருவர் எதை வெறுக்கிறாரோ அதை அவரும் மற்றவர்க்குச் செய்யக்கூடாது என்று கன்பூசியஸ் கூறினார்.

அவருடைய மதிநுட்பத்தாலும் உயர்ந்த கருத்துகளாலும் சீன மக்களின் நாகரீகமும் பண்பாடும் வளர்ச்சியுற்றன. கன்பூசியஸ் தமது எழுபத்து மூன்றாம் வயதில் காலமானார். அவர் மறைந்த போதிலும் அவருடைய அறிவுரைகள் மறையவில்லை. மக்கள் இன்றும் அவற்றை நூல்கள் வாயிலாக படித்துப் பயனடைகின்றனர்.

வினாக்கள்

Q. . உலகில் தோன்றிய அறிஞர்கள் எவ்வாறு விளங்கினர் ? (3)

______________________________

______________________________

______________________________

______________________________

19) கம்பூசியஸின் கல்வி பற்றிய சிந்தனை என்ன? (4)

20) கம்பூசியஸ் ஏன் தன் அரசப் பதவியைத் துறந்தார்? (4)

21) கம்பூசியஸ் அறிவுரைப் பணியில் ஈடுபடக் காரணம் என்ன? (4)

22) கம்பூசியஸ் மக்களுக்குக் கூறிய கருத்துகள் யாவை? (4)

23. கம்பூசியஸின் கருத்துகளால் மக்கள் எவ்வாறு பயனடைந்தனர்? (3)

________________________________________

________________________________________

________________________________________

24. சொற்பொருள் (4 ம.)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. நாட்டம் - ____________________

ஆ. வாயிலாக - ____________________

P -6 உயர்தரம் தாள் -5

அமெரிக்காவில் நியூயார்க்...

1) கம்பீரமாக 2) இருக்கிறது 3) தேதி 4)தலையை 5) உடைந்த

6)கனிவாகப் பேச வேண்டும்.
7) சில நாட்கள் இருக்கின்றன.
8) பணப்பை கண்டெடுக்கப்பட்டது.
9) நோய்க்கிருமிகளே காரணமாகின்றன.

9) காற்றுடன் 10) உயிரினங்களால் 11)நீர்த்தேக்கத்திலிருந்து 12) அளவுக்கு

13) 4 14) 8 15)1 16) 5 17) 5

18)உலகில் தோன்றிய அறிஞர்கள் மக்களுக்கு நல்வழி காட்டினர். அவர்கள் சொல்லாலும் செயலாலும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கினர்.

19)கற்பவை அனைத்தும் கசடறக் கற்க வேண்டும் என்பதும் மாணவர்களில் ஏழை செல்வர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் ஒன்றாக மதித்துக் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே கம்பூசியஸின் கல்வி பற்றிய சிந்தனை ஆகும்.

20)கம்பூசியஸ் அரசப் பதவியில் இருந்த போது அல்லும் பகலும் உழைத்தார். அரசாங்கத்தில் பல பதவிகள் அவரை நாடி வந்தன. அவர் அவ றில் சிறந்து விளங்கினார். அதனால் அவரது புகழ் மேன்மேலும் பரவியது. இதனைக் கண்டு பலர் பொறாமை கொண்டனர். அதனால் அவர் தமது அரசப் பதவியைத் துறந்தார்.

21) பொறாமையும் பூசலும் கொண்ட மக்கள் கூட்டத்தைக் கண்டு கம்பூசியஸ் மன வேதனை அடைந்தார். மக்களுக்கு அறநெறிக் கருத்துக்களைப் புகட்ட எண்ணினார். அதனால் அவர் அறிவுரைப் பணியில் ஈடுபட்டார்.

22) கம்பூசியஸ் உலகில் மனிதன் மகிழ்ச்சியோடும் நெறியொடும் வாழ்வது எப்படி என்பதைத் தெளிவாக விளக்கினார். மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று போதித்தார். ஒருவர் எதை வெறுக்கிறாரோ அதை அவரும் மற்றவர்க்குச் செய்யக்கூடாது என்று கருத்துரைத்தார். இவையே கம்பூசியஸ் மக்களுக்குக் கூறிய கருத்துகள் ஆகும்.

23) கம்பூசியஸின் கருத்துகளால் மக்களின் நாகரீகமும் பண்பாடும் வளர்ச்சி அடைந்தன. இவ்வாறு மக்கள் அவரின் கருத்துகளால் பயனடைந்தனர்.

24) பொருள்:
அ. விருப்பம்

ஆ. வழியாக

தேர்வுத்தாள் - 1

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 1
PRIMARY SIX

# HIGHER TAMIL LANGUAGE

Name : ______________ ( )

Class : Pr 6 ______________

Date :

Parent's Signature: ______________

| /60 |
|---|

Total Time: 1 hour 20 minutes

24 Questions
60 Marks

Instructions

Do not open this booklet until you are told to do so.
Follow all instructions carefully.
Answer all questions.

This booklet consists of 9 printed pages.

50

P6/HMT/SA 1/1

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் <u>ஒன்றைத்</u> தேர்ந்தெடுத்து <u>150 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

**<u>வினா 1</u>**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்"**

நீ பள்ளிப் பாடம் ஒன்றில் எப்பொழுதும் தோல்வியையே சந்தித்துள்ளாய். வெற்றிப் பெற இப்பாடத்தில் என்னென்ன முயற்சிகள் எடுத்தாய், யாரெல்லாம் உதவி செய்தனர், இறுதியில் உன் மனநிலை எப்படி இருந்தது?

**<u>வினா 2</u>**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

என் கணினியின் வழி வந்த மின்னஞ்சலை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன். நிலநடுக்கத்தில் சிக்கித் தவிக்கும் அண்டை நாட்டு மக்களுக்கு உதவ ஒரு நிதி திரட்டும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி என் ஆசிரியர் எனக்கு ஒரு செய்தி அனுப்பி இருந்தார். நீண்ட நேரம் யோசிக்கத் தொடங்கினேன்...........

P6 HHT தாள் - 1

'அ' பிரிவு

A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்டச் சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்காணும் கட்டத்தில் எழுது.

பொதுவாக வாழையிலையில் உணவு உண்பது கால காலமாகத் தமிழர்கள் பின்பற்றி வரும் ஒரு பழக்கம் ஆகும். தற்போது பலர் பளபளக்கும் தட்டுகளிலும் பேப்பர் தட்டுகளிலும் உணவு பரிமாறினாலும், விழா நாட்களின் போதும் சில உணவகங்களில் இன்றும் பலர் (Q1) வாழையிலையுடன் உணவு பரிமாறுவதைக் கடைப்பிடித்து வருவதை நாம் காணலாம்.

அக்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி வாழையிலை இலகுவாகக் கிடைக்கக்கூடிய (Q2) மலிவாக ஒரு பொருள். வாழையிலையில் உள்ள சில ஊட்டச் சத்துகள் சூடான உணவுடன் கலக்கும் போது நல்ல ஆரோக்கிய பலனை மட்டுமன்றி உணவிற்கு நல்ல (Q3) மனமும் சேர்க்க வல்லது என்று சிலர் நம்புகிறார்கள்.

வாழையிலை தானே, எப்படி வேண்டுமானாலும் பரிமாறிவிடலாம், என்று நாம் உணவைக் கண்டபடி பரிமாறிவிட முடியாது. நம் முன்னோர்கள் வாழையிலையில் உணவு பரிமாறுவதற்கு என்று சில முறைகளைக் கடைப்பிடித்து (Q4) வந்தார்.

தமிழர்கள் ஒருவருக்குப் பரிமாறும் போது வாழையிலையின் நுனி அவரது இடது பக்கமாகவும் அடிப்பகுதி வலது பக்கமாகவும் இருக்கும்படி (Q5) பார்த்துக்கொள்கிறார்கள். பின்னர், சிறிதளவு உப்பைப் பரிமாறுவர். உணவில் அவரவர் சுவைக்கு ஏற்ப உப்பை உணவுடன் சேர்த்து உண்ணுவதற்காக இப்படி செய்வது வழக்கம்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

A2 வாக்கியங்களை முடித்தெழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. பாலன் விடாமுயற்சியுடன் படித்ததால் எல்லா பாடங்களிலும் வெற்றி பெற்றான்.

பாலனின் வெற்றிக்குக் அவன் எல்லா பாடங்களையும்

______________________________________

Q7. தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார்.

மின்சார விளக்கு தாமஸ் ஆல்வா எடிசன் என்பவரால்

_________________________________

(அடுத்த பக்கம் பார்க்கவும் )



59

Q8. சுமாத்திராவில் நடந்த நிலநடுக்கத்தினால் சிங்கப்பூரில் அதிர்வு ஏற்பட்டது.

சுமாத்திராவில் நடந்த நிலநடுக்கம் சிங்கப்பூரில் ______________________

______________________.

Q9. மாறன் நள்ளிரவு வரை தொலைக்காட்சியில் படம் பார்த்ததால் பள்ளிக்குத் தாமதமாக வந்தான்.

மாறன் பள்ளிக்குத் தாமதமாக வந்ததற்கு நள்ளிரவு வரை

தொலைக்காட்சியில் படம் ______________________.

A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

உலகப் புகழ் பெற்ற திருவள்ளுவருடைய மனைவியின் பெயர் வாசுகி. எளிமை மிக்க உழவர் (Q10) ______________ (குடும்பம்) பிறந்த வாசுகி சிறந்த மனைவியாக வாழ்ந்தார். சென்னையில் உள்ள மயிலாப்பூர் என்னும் ஊரில் திருவள்ளுவரும் வாசுகியும் (Q11) ______________ (மகிழ்ச்சி) வாழ்ந்து வந்தனர்.

அக்காலத்தில் கொங்கணர் என்ற ஒரு முனிவர் தவம் செய்து பல ஆற்றல்களைப் பெற்றிருந்தார். அவர் வாசுகி திருவள்ளுவர் ஆகிய (Q12) ______________ (இருவர்) சிறப்பினையும் அறிந்து அவர்களைக் காண ஆவலுடன் அவ்வூரை நோக்கிச் சென்றார்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

அவர் காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்த போது கொக்குகள் சில அவரது Q13.______________ (தலை) மேல் பறந்து சென்றன. ஒரு கொக்கின் எச்சம் அவரது தலையில் விழுந்ததால் அவர் கோபம் கொப்பளிக்க கொக்கைப் பார்த்தார். அவருடைய கோபப் பார்வையில் கொக்கு எரிந்து சாம்பலானது.

## 'ஆ' பிரிவு

B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

மன்னன் ஒருவன் ஒருமுறை காட்டிற்கு வேட்டையாடப் போனான். வெகுதூரம் வேட்டையாடிய பிறகு அவன் காட்டில் வழி தவறிவிட்டான். (Q14) ______________________. அவ்விருவரும் வெகுதூரம் அலைந்து திரிந்தனர். அத்தருணத்தில் அவர்கள் ஒரு குடிசையைக் கண்டனர். இருவருக்கும் கடும்பசி. (Q15) ______________________.

குடிசைக்குள் இருந்த ஒரு கிழவி அவர்களை வரவேற்று அமரச் சொன்னார். (Q16) ______________________. "ஆகா , கீரை எவ்வளவு ருசியாக இருக்கிறது," என்று கூறி மன்னன் தன் இரத்தின மாலையைக் கிழவிக்குப் பரிசாக அளித்தான்.

இதைப் பார்த்த சமையற்காரன் அரண்மனை சென்றதும் சாதத்தை வடித்துக் கீரை சமைத்து மன்னனுக்குப் பரிமாறினான். (Q16)______________________. அரசன் உடனே சமையற்காரனை வேலையை விட்டு நீக்கினான். "பசி ருசி அறியாது ," என்பதைச் சமையற்காரன் தெரிந்து கொண்டிருக்கவில்லையே !

(அடுத்த பக்கம் பார்க்கவும் )

(1) அரசன் பசியால் அலைந்து திரிந்தான்.

(2) எனவே அவர்கள் சற்றும் தாமதிக்காது உள்ளே சென்றனர்.

(3) மன்னனுடன் அவன் சமையற்காரனும் இருந்தான்.

(4) அவ்வுணவைக் கண்டதும் மன்னன் சீற்றமடைந்தான் .

(5) அவர்கள் உணவு தேட எண்ணினர்.

(6) அவ்வுணவை மன்னன் பசி தீர உண்டான்.

(7) பின்னர் அவள் சோற்றையும் கீரையையும் உணவாகப் படைத்தாள் .

(8) கிழவி அவர்களை உணவு உண்ண அழைத்தாள்.

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

(அடுத்த பக்கம் பார்க்கவும் )



62

*சுயவிடைக் கருத்தறிதல்*
*பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.*

மரங்கள் நமது வாழ்க்கையில் முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. மரங்கள் பல வருடங்கள் உயிர் வாழக்கூடியவை. இவ்வுலகின் இயற்கை அழகை நாம் மரங்களில் கண்டு ரசிக்கலாம்.

காற்று இல்லாமல் நம்மால் உயிர் வாழ முடியாது. மரங்கள் காற்றைத் தூய்மைப்படுத்துகின்றன. காற்று தேவை என்றால் மரங்கள் தேவை. மரங்கள் கோடைக்காலங்களில் நமக்கு நிழலைத் தருவதோடு, அதிகமான வெப்பத்தை எடுத்துக் கொண்டு நமக்குத் தேவையான குளிர்ந்த காற்றை வழங்குகின்றன.

மரங்கள் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் பயனுள்ளதாக விளங்குகின்றன. பறவைகளும் மிருகங்களும் மரங்களைத் [redacted] மேலும் அவற்றிற்குத் [redacted] மனிதர்களோ தேக்கு மரங்களை அதிகம் பயன்படுத்துகிறார்கள். தேக்கு மரத்தால் செய்யப்படும் பொருள்கள் நல்ல தரம் உடையவை. அவை நீண்ட காலம் உழைக்கும் தன்மையுடையவை. ஆதலால் தான், நம் வீடுகளில் உள்ள பல மரச்சாமான்கள் தேக்கு மரத்தால் செய்யப்படுகின்றன.

மருந்துகள் தயாரிக்கவும் மரங்கள் பயன்படுகின்றன. சில மருத்துவ குணமுள்ள மரங்களில் பூக்கும் மலர்கள், மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன. மரங்கள் நிலத்தின் <u>தன்மையை</u> மாற்றாமல் அதை அப்படியே வைத்திருக்கும். அவை நிலத்தின் அடியில் இருக்கும் நீரைத் தூய்மைப்படுத்தவும் உதவும்.

பல பயன்களை நமக்குத் தரும் மரங்களை இன்றைய நாகரீக உலகம் அழித்து வருகிறது. மரங்களை அதிகமாக வெட்டுவதால் நமக்குச் சுத்தமான காற்று கிடைக்காது. சுற்றுப்புறச் சூழலும் பாதிப்பு அடைகிறது.

மரங்களைத் தேவைக்கு அதிகமாக வெட்டாமல் அதனை நமது நாட்டின் சொத்தாகப் பாதுகாக்க வேண்டும். நமது சுற்றுச்சூழலில் அதிகமான மரங்களை நட்டு வைக்கவேண்டும். மேலும் மரத்தால் செய்யப்படும் பொருள்களை மறுபயனீடு செய்வது நலமாகும். இவ்வாறு செய்வதால் நாம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம்.

மூலம் : வியோவின் பொது கட்டுரைகள்

*வினாக்கள்*

18. நாம் உயிர் வாழ ஏன் மரங்கள் தேவை? (3)

19. கோடைக்காலத்தில் மரங்கள் நமக்கு எப்படி உதவுகின்றன? (4)

20. மரங்களால் பறவைகளும் மிருகங்களும் என்ன நன்மைகள் பெறுகின்றன? (3)

___

___

___

21. தேக்கு மரங்களை ஏன் மனிதர்கள் அதிகம் பயன்படுத்துகிறார்கள்? (3)

___

___

___

22. நம் சுற்றுச் சூழல் பாதிப்படையக் காரணம் என்ன? (3)

___

___

___

23. நாம் சுற்றுச் சூழலை எவ்வாறு காத்துக் கொள்ளலாம்? (4)

___

___

___

பொருள் (2x2=4)

24. தன்மை ___

25. நாகரிக ___

P6 SA1 . . தாள் - 1

பொதுவாக வாழையிலையில்........

1. வாழையிலையில் 2. மலிவான 3. மணமும் 4. வந்தார்கள்
5. பார்த்துக்கொள்கிறார்கள்.

6. விடாமுயற்சியுடன் படித்ததே காரணமாகும்.

7. கண்டுபிடிக்கப்பட்டது.

8. அதிர்வை ஏற்படுத்தியது..

9. பார்த்ததே காரணமாகும்.

10. குடும்பத்தில் 11. மகிழ்ச்சியுடன் 12. இருவரின் 13. தலைக்கு

14. 3 15. 2 16. 7 17. 4

சுயவிடைக் கருத்தறிதல்

மரங்கள் நமது வாழ்க்கையில் ............

18. காற்று இல்லாமல் நம்மால் உயிர் வாழ முடியாது என்பதாலும் மரங்கள் காற்றைத் தூய்மைப்படுத்துகிறதால் நாம் உயிர் வாழ மரங்கள் தேவை.

19. மரங்கள் நிழலைத் தருவதோடு, அதிகமான வெப்பத்தை எடுத்துக் கொண்டு நமக்குத் தேவையான குளிர்ந்த காற்றை வழங்குகிறது. இவ்வாறு கோடைக்காலத்தில் மரங்கள் நமக்கு உதவுகின்றன.

20. மரங்கள் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் தங்குவதற்கு இடமும், அவற்றிற்குத் தேவையான பழங்களையும் காய்கறிகளையும் அளிப்பதன் மூலம் நன்மையளிக்கின்றன.

21. தேக்கு மரத்தால் செய்யப்படும் பொருள்கள் நல்ல தரம் உடையவை என்பதாலும் அவை நீண்ட காலம் உழைக்கும் தன்மயுடையவை என்பதாலும் தேகு மரங்களை மனிதர்கள் அதிகம் பயன்படுத்துகிறார்கள்.

22. பொருள்கள் செய்யவும் மருந்துகள் செய்யவும் மரங்கள் பயன்படுவதால் அவற்றை இன்றைய நாகரீக உலகம் அழித்து வருவதே நம் சுற்றுச் சூழல் பாதிப்படையக் காரணமாகும்.

23. மரங்களைத் தேவைக்கு அதிகமாக வெட்டாமல், அதை நாட்டின் சொத்தாகப் பாதுகாத்து சுற்றுச் சூழலில் அதிகமான மரங்களை நட்டு வைத்து மரத்தால் செய்யப்படும் பொருள்களை மறுபயனீடு செய்வதன் மூலம் நாம் சுற்றுச் சூழலைக் காத்துக் கொள்ளலாம்.

24. இணைத்தை 25. நவீன

தொடக்கப்பள்ளி

தொடக்கநிலை 6

ஆண்டிறுதித் தேர்வு – 2

உயர்தமிழ்

P6/HTL/

பெயர் : ____________ (   )　　மதிப்பெண் : ________ / 60

வகுப்பு : P6/ ________　　நேரம் : 1 hr 20mins

*கட்டளைகள்*

1. ஆசிரியர் சொல்லும்வரை தாளைத் திருப்பாதே.
2. கட்டளைகளைக் கவனமாகப் படித்துப் பின்பற்று.
3. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.

P6 HMT

SA - 1 தாள்- 2

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்றைத்** தேர்ந்தெடுத்து **150 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம். (40 மதிப்பெண்கள்)

**வினா 1**

**மின்தூக்கியில் சிக்கிக்கொண்ட சம்பவம்**

மேற்கண்ட தலைப்பில் **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை/கதை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை இந்தல் லட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

* அச்சம்பவம் எப்போது, எங்கு நடந்தது?
* உன்னுடன் யாரெல்லாம் இருந்தனர்?
* அப்போது உன் மனநிலை எப்படி இருந்தது?
* யாருடைய உதவியெல்லாம் உனக்குக் கிடைத்தது?

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கதை எழுது.

நேரமாகிக் கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் இருட்டிவிடும். அந்த வழியில் திருடர்கள் பயம் வேறு அதிகம். யாராவது வரமாட்டார்களா என்று எதிர்பார்த்தேன். அப்போது 'பளிச்' என்ற வெளிச்சம் என் முகத்தில் அடித்தது....................

தாள் - 2

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 1
HIGHER TAMIL LANGUAGE PAPER 2
PRIMARY 6

| | |
|---|---|
| | 60 |

Parents' Signature: ______________

Name : ______________________ Reg.No.(____) Date : ____________

Class : P6 ______________ Time : ____________ (1hour 20 min)

( அ பிரிவு)

A 1. <u>பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)</u>

பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.

அந்தக் காலத்தில் கடற்கொள்ளைக்காரர்கள் அதிகமாகவே தென்பட்டனர். கப்பல் பயணம் செய்பவர்களுக்கு அவர்களின் அட்டகாசம் (Q1) <u>தாங்கி</u> முடியாத ஒன்றாக இருந்தது. அவர்களுக்கென்றே ஒரு தனித் தோற்றம் இருந்தது. காது குத்தி, காதில் வளையமும் மாட்டிக்கொண்டால் கண்பார்வை கூர்மையாகும் (Q2) <u>எண்பது</u> அந்தக் காலத்தில் கடல் கொள்ளைக்காரர்கள் இடையே நிலவிய நம்பிக்கை. அப்போது பல பேர் இதை மூட நம்பிக்கையென்று (Q3) <u>நினைத்தார்.</u> ஆனால், பிற்காலத்தில் 'அக்யுபங்க்சர்' கலை வளர்ந்த பிறகு காதில் போடும் வளையம் அலங்காரப் பொருள் மட்டுமல்ல, அதனால் பல (Q4) <u>நன்மையும்</u> ஏற்படுகின்றன என்று தெரிந்து கொண்டார்கள். காது மடலில் துளை போட்டு, வளையம் மாட்டும் இடத்தில், பார்வையை நெறிப்படுத்தும் ஒரு நரம்பு (Q5) <u>இருக்கும்.</u> எனவே, காது குத்தினால் உண்மையிலேயே கண்பார்வை கூர்மையாகிறது.

| | |
|---|---|
| (Q1) | |
| (Q2) | |
| (Q3) | |
| (Q4) | |
| (Q5) | |

| | |
|---|---|
| | 10 |

A 2 வாக்கியங்களை முடித்து எழுதுதல் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.

Q6. காவலர்கள் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த பிணையாளிகளைச் சாமர்த்தியமாகக் காப்பாற்றினார்கள்.
தீவிரவாதிகளின் பிடியில் இருந்த பிணையாளிகள் ______________________________
______________________________________________________

Q7. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்த்த வேலனின் கண் பார்வை மங்கியது.
வேலனின் கண் பார்வை மங்க ______________________________
______________________________________________________

Q8. துன்பத்தைக் கண்டு துவண்டுவிடாத மனம் படைத்தவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுவர்.
துன்பத்தைக் கண்டு துவண்டுவிடும் மனம் படைத்தவர்கள் ______________________________
______________________________________________________

Q9. புலி தனக்குப் பசியில்லாத நேரங்களில் மற்ற விலங்குகளை வேட்டையாடாது.
புலி தனக்குப் பசியுள்ள ______________________________
______________________________________________________

| / 8 |
|---|

71

A3 வேற்றுமை உருபுகள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் ஆர்லண்டோ என்ற இடத்தில் கடல்வாழ் உயிரினங்களின் பூங்கா உள்ளது. அதற்குப் பெயர் 'ஸீ வேர்ல்ட்' கடலடி உலகம். இங்குத் திமிங்கலப் பயிற்சியாளராகப் பதினாறு ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த டான் பிரான்சியூ என்ற நாற்பது வயது (Q10)____________________(பெண்) ஒரு திமிங்கலம் தாக்கிக் கொன்றது. கடல்வாழ் உயிரினங்கள் பூங்காவில் திமிங்கலங்களைப் பற்றி (Q11)____________________(பார்வையாளர்கள்) பிரான்சியூ விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தபோது இந்தக் கொடூரமான சம்பவம் நிகழ்ந்தது.

சம்பவத்தை நேரில் பார்த்த சிலர், அந்தத் திமிங்கலம் (Q12)____________________(தொட்டி) குதித்து, அப்பெண்மணியை இழுத்துக் கொண்டு கடல் அடிக்குச் சென்றுவிட்டதாகக் கூறினர். அந்தத் திமிங்கலம் ஏற்கனவே 1991-ம் ஆண்டு (Q13)____________________(கனடா) ஒரு பயிற்சியாளரைக் கொன்றிருக்கின்றதாம். ஏற்கனவே ஒருவரைக் கொன்றிருக்கும் திமிங்கலத்தை இன்னும் 'ஸீ வேர்ல்ட்' கடல்வாழ் உயிரினங்கள் பூங்காவில் வைத்திருப்பது தவறு என்று பல நாடுகளிலிருந்தும் பலரும் கருத்துக் கூறி இருக்கின்றனர்.

நன்றி: மாணவர் முரசு

| | |
|---|---|
| | 8 |



72

'ஆ' பிரிவு

B 4 <u>கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)</u>

பின்வரும் பகுதியில் Q 14 முதல் Q 17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.

ஒரு சமயம் நெப்போலியனின் படைவீரர்கள் எதிரிகளால் சூழப்பட்டு மோசமான நிலையில் இருந்தனர். (Q14)____________________. அதனால், நெப்போலியனைக் காண அவரைத் தேடி அவர் அறைக்கு வந்தான். (Q 15)____________________. அவரை எழுப்பலாமா வேண்டாமா என்று தளபதி தயங்கினான்.

அப்போது அந்த அறையிலிருந்த மேசையின் மேல் ஒரு கடிதம் இருப்பதைத் தளபதி தற்செயலாகப் பார்த்தான். (Q16)____________________. அதில் அன்று இரவு இப்படியொரு தாக்குதலை எதிரிகள் ஏற்படுத்தக்கூடும் என நெப்போலியன் ஊகித்திருந்தார். அவ்வாறு நடந்தால் அந்த நிலையை எவ்வாறு சமாளிப்பது என்பதற்கான வழிமுறைகளையும் அவர் தெளிவாக எழுதியிருந்தார். பின்னால் நடக்கவிருப்பதை முன்கூட்டியே நெப்போலியனால் எப்படித் துரிதமாக யோசிக்க முடிந்தது? என்று கடிதத்தைப் படித்து வியப்பு அடைந்தான் தளபதி. அவன் நெப்போலியனை எழுப்பாமலேயே சென்றான். பின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபடியே எதிர்தாக்குதல் நடத்தினான். (Q 17)____________________. வெற்றி பெறுவதற்குச் சமயோசித புத்தியும் முன்னெச்சரிக்கையும் அவசியம் என்பதை தளபதி நெப்போலியனிடமிருந்து கற்றுக்கொண்டான்.

(1) அந்நேரத்தில் நெப்போலியன் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்.
(2) தளபதி என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான்.
(3) கடிதம் பிரிக்கப்படாமல் இருந்தது.
(4) தளபதி நெப்போலியனின் ஆலோசனையைப் பெற நினைத்தான்.
(5) அந்நேரத்தில் நெப்போலியன் வேலையாக இருந்தார்.
(6) இதனால் நெப்போலியனின் படை வென்றது.
(7) அவன் அதை எடுத்துக் கொண்டான்.
(8) அவன் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தான்

| வினா எண் | விடை |
|---|---|
| Q14 | |
| Q15 | |
| Q16 | |
| Q17 | |

| |
|---|
| 8 |

C 5. <u>சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)</u>

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.

அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் புதியன கண்டுபிடிப்பவர்களை அறிவியல் வல்லுநர்கள் என அழைக்கிறோம். அவர்களுள் இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் (Albert Einstein). அவர் தன்னிகரற்று விளங்கிய அறிவியல் மேதையாவார். ஐரோப்பாக் கண்டத்தில் அறிவுத் துறைக்கும், கலைத் துறைக்கும் நாகரிகத்திற்கும் பெயர் பெற்றது ஜெர்மனி. அங்கு 'உல்ம்' என்னும் நகரில் 1879-ம் ஆண்டு மார்ச் திங்கள் 14-ஆம் நாள் ஹெர்மன் ஐன்ஸ்டைன் தம்பதிக்கு மூத்த மகனாக ஆல்பர்ட் பிறந்தார். ஹெர்மன் ஐன்ஸ்டைன் மின் காந்தத் தொழிற்சாலை நடத்தி வந்தார். இந்தத் தொழில் போதிய <u>வருவாய்</u> தரும் ஒன்றாக அமையவில்லை. இருப்பினும், அவர் மகனை நன்முறையில் வளர்த்தார். ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் எதையும் துருவி ஆராயும் இயல்புடையவர். அவர் தமக்கு ஏற்படும் ஐயங்களையும் பொருள்களைப் பற்றிய உண்மை விளக்கங்களையும் பொறியியல் வல்லுநரான தம் சிற்றப்பாவிடம் கேட்டு அறிந்துகொண்டார்.

ஐன்ஸ்டைன் குழந்தைப் பருவத்தில் மற்றப் பிள்ளைகளைவிட பின்தங்கிய நிலையில் இருந்தார். மூன்று வயது வரையிலும்கூட அவரால் ஒரு வார்த்தையும் பேச இயலவில்லை. ஆயினும், பெற்றோர் அவரிடம் அன்புக் காட்டிப் பரிவுடன் வளர்த்து வந்தனர். காலங்கடந்து பேசத் தொடங்கிய ஐன்ஸ்டைன் மற்ற சிறுவர்களைப்போல் விளையாட்டில் ஆர்வம் கொள்ளவில்லை. பள்ளியிலும் பிற பிள்ளைகளைப்போல் சுறுசுறுப்புடன் திகழவில்லை. ஆனால், நாள் செல்லச் செல்ல ஐன்ஸ்டைன் கெட்டிக்காரராக விளங்கினார். பள்ளியில் ஆசிரியர் திரும்பத் திரும்ப ஒன்றையே கூறிக்கொண்டிருப்பதைச் சிறுவயதிலேயே ஐன்ஸ்டைன் வெறுத்தார்.



74

ஐன்ஸ்டைனின் தாயார் இசையில் தேர்ச்சி பெற்றவர். அவர் வயலின் இசைக்
கருவியை நன்றாக இசைப்பார். அதனால், இசைதான் ஐன்ஸ்டைனுக்கு
வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்தது. அவர் சிறந்த வயலின் கலைஞராக
விளங்கினார். மன அமைதி தேவைப்படும்போதெல்லாம் வயலைன் இசையை
எழுப்பி மன் அமைதி பெறுவது அவருடைய வழக்கம். ஐன்ஸ்டைன் பள்ளியில்
படிக்கும் காலத்தில் மொழிப் பாடத்தைவிட கணிதப் பாடத்திலும் பௌதிகப்
(Physics) பாடத்திலும் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார். அவற்றில் அவர்
சிறந்து விளங்கினார். இலமையில் அவர் பெற்றா கணிதப் பயிற்சியே அவரைப்
பிற்காலத்தில் அறிஞர்கள் போற்றும் மாபெரும் அறிவியல் மேதையாக்கியது.
ஐன்ஸ்டைன் படிப்படியாகக் கற்றுப் பலதுறைத் தொழிற்கல்லூரியில் பட்டம்
பெற்றார். அதன் பிறகு ஆசிரியராகப் பணியாற்றினார். தொடர்ந்து தமது
பௌதிக ஆராய்ச்சியில் முழு நேரத்தையும் செலவிட்டார். உயர்க்கல்வி கற்ற
அவருக்கு 1905-ம் ஆண்டு சுவிட்சர்லாந்திலுள்ள சூரிக் பல்கலைக் கழகம்
பட்டம் வழங்கியது.

<u>வினாக்கள்</u>

Q18. ஐன்ஸ்டைன் மற்ற விஞ்ஞானிகளைவிடத் தன்னிகரற்று விளங்கக் காரணம் என்ன? (3)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Q19. ஐன்ஸ்டைன் எதையும் துருவி ஆராயும் குணமுடையவர் என்று ஏன் கூறப்படுகிறது (4)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________



75

Q20. சிறு வயதில் ஐன்ஸ்டைன் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் வேறுபட்டு இருந்தார் என்பதை எவ்வாறு அறியலாம்? (4)

Q21. ஐன்ஸ்டைனுக்கும் வயலின் இசைக்கும் உள்ள தொடர்பை விலக்கி எழுது? (4)

Q22. ஐன்ஸ்டைன் அறிவியல் மேதையாக எது காரணமாக இருந்தது? (3)

Q23. ஐன்ஸ்டைன் ஓர் அறிவியல் மேதையாகாமல் இருந்திருந்தால் வேறு எத்துறைகளில் சிறந்து விலங்கியிருப்பார்? ஏன்? (4)

Q24. <u>பொருள் எழுது</u> (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருலை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது.

அ. வருவாய் - ______________________ (2)

ஆ. போற்றும் - ______________________ (2)



77

P6 HMT திாள் - 2

அந்தக் காலத்தில் கடற்கொள்ளை..........

1. தாங்க 2. என்பது 3. நினைத்தார்கள் 4. நன்மைகளும் 5. இருக்கிறது

6. காவலர்களால் சாமர்த்தியமாகக் காப்பாற்றப்பட்டனர்.

7. அவன் தொடர்ந்து தொலைக்காட்ட்சி நிகழ்ச்சிகலைப் பார்த்ததே காரணம் ஆகும்.

8. வாழ்க்கையில் வெற்றி பெற மாட்டார்கள்.

9. நேரங்களில் மற்ற விலங்குகளை வேட்டை ஆடும்.

10. பெண்ணை 11. பார்வையாலர்களிடம் 12. தொட்டியிலிருந்து
13. கனடாவில்

14. 4 15. 1 16. 8 17. 6

18. விஞ்ஞான உலகில் இருபதாம் நூற்றாண்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய அறிவியல் மேதை என்பதாலேயே ஐன்ஸ்டைன் மற்ற விஞ்ஞானிகளைவிடத் தன்னிகரற்று விலங்கக் காரனமாகும்.

19. ஐன்ஸ்டைன் தனக்கு ஏற்படும் ஐயங்களையும் பொருள்களைப் பற்றிய உண்மை விளக்கங்களயும் பொறியியல் வல்லுனரான தன் சிற்றப்பாவிடம் கேட்டு அறிந்து கொண்டதிலிருந்து அவர் எதையும் துருவி ஆராயும் குணமுடையவர் என்று கூறப்படுகிறது.

20. ஐன்ஸ்டைன் குழந்தைப் பருவத்தில் மற்றப் பிள்ளைகளைவிட பின்தங்கிய நிலையில் இருந்ததோடு மூன்று வயது வரையில் கூட அவரால் ஒரு வார்த்தையும் பேச முடியவில்லை. மேலும் மற்ற சிறுவர்களைப் போல் விளையாட்டில் ஆர்வம் கொள்ளவில்லை. பள்ளியிலும் பிற பிள்ளைகளைப் போல் சுறுசுறுப்பாகத் திகழவில்லை. இவற்றிலிருந்து அவர் மற்ற பிள்ளைகளிடமிருந்து அவர் வேறுபட்டிருந்தார் என்பதை அறியலாம்.

21. இசையில் தேர்ச்சி பெற்ற ஐன்ஸடைனின் தாயார் வயலின் இசைக் கருவியை நன்றாக வாசிப்பார். ஐன்ஸடைனுக்கும் இசைதான் வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்ததால் அவரும் சிறந்த வயலின் கலைஞராகத் திகழ்ந்தார். அதோடு அவருக்கு மனஅமைதி தேவைப்படும்போதெல்லாம் வயலின் வாசித்து அமைதி அடைவது அவரின் வழக்கம். இவ்வாறு வயலின் இசைக்கும் ஐன்ஸ்டைனுக்கும் உள்ள தொடர்பை அறியலாம்.

P6 HMT தாள் - 2

அந்தக் காலத்தில் கடற்கொள்ளை.........

1. தாங்க 2. என்பது 3. நினைத்தார்கள் 4. நன்மைகளும் 5. இருக்கிறது

6. காவலர்களால் சாமர்த்தியமாகக் காப்பாற்றப்பட்டனர்.

7. அவன் தொடர்ந்து தொலைக்காட்ட்சி நிகழ்ச்சிகலைப் பார்த்ததே காரணம் ஆகும்.

8. வாழ்க்கையில் வெற்றி பெற மாட்டார்கள்.

9. நேரங்களில் மற்ற விலங்குகளை வேட்டை ஆடும்.

10. பெண்ணை 11. பார்வையாலர்களிடம் 12. தொட்டியிலிருந்து
13. கனடாவில்

14. 4 15. 1 16. 8 17. 6

18. விஞ்ஞான உலகில் இருபதாம் நூற்றாண்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய அறிவியல் மேதை என்பதாலேயே ஐன்ஸ்டைன் மற்ற விஞ்ஞானிகளைவிடத் தன்னிகரற்று விலங்கக் காரனமாகும்.

19. ஐன்ஸ்டைன் தனக்கு ஏற்படும் ஐயங்களையும் பொருள்களைப் பற்றிய உண்மை விளக்கங்களயும் பொறியியல் வல்லுனரான தன் சிற்றப்பாவிடம் கேட்டு அறிந்து கொண்டதிலிருந்து அவர் எதையும் துருவி ஆராயும் குணமுடையவர் என்று கூறப்படுகிறது.

20. ஐன்ஸ்டைன் குழந்தைப் பருவத்தில் மற்றப் பிள்ளைகளைவிட பின்தங்கிய நிலையில் இருந்ததோடு மூன்று வயது வரையில் கூட அவரால் ஒரு வார்த்தையும் பேச முடியவில்லை. மேலும் மற்ற சிறுவர்களைப் போல் விளையாட்டில் ஆர்வம் கொள்ளவில்லை. பள்ளியிலும் பிற பிள்ளைகளைப் போல் சுறுசுறுப்பாகத் திகழவில்லை. இவற்றிலிருந்து அவர் மற்ற பிள்ளைகளிடமிருந்து அவர் வேறுபட்டிருந்தார் என்பதை அறியலாம்.

21. இசையில் தேர்ச்சி பெற்ற ஐன்ஸடைனின் தாயார் வயலின் இசைக் கருவியை நன்றாக வாசிப்பார். ஐன்ஸடைனுக்கும் இசைதான் வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்ததால் அவரும் சிறந்த வயலின் கலைஞராகத் திகழ்ந்தார். அதோடு அவருக்கு மனஅமைதி தேவைப்படும்போதெல்லாம் வயலின் வாசித்து அமைதி அடைவது அவரின் வழக்கம். இவ்வாறு வயலின் இசைக்கும் ஐன்ஸ்டைனுக்கும் உள்ள தொடர்பை அறியலாம்.

22. மொழிப்பாடத்தை விட பௌதிகம் மற்றும் கணிதப் பாடத்தில் அவருக்கு ஆர்வம் அதிகம் இருந்ததால் அவற்றில் அவர் சிறந்து விளங்கியதோடு இளமையில் கணிதத்தில் அவர் பெற்ற பயிற்சியே அவர் அறிவியல் மேதையாகக் காரணமாக இருந்தது.

23. இசை ஐன்ஸ்டைனுக்கு அமைதியைக் கொடுத்ததாலும் அவரே ஒரு சிறந்த வயலின் கலைஞராக விளங்கியதாலும் அவர் ஓர் அறிவியல் மேதையாக ஆகாமல் இருந்திருந்திருந்தால் அவர் இசைத் துறையிலேயே சிறந்து விளங்கியிருப்பார்.

Q24. சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

அ. சம்பளம்
ஆ. புகழும்